உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 30 செவ்வாய்க்கிழமை (14-01-2003)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:49

## புலிகளின் கட்டளைப்படி அரசு நடக்கின்றது

# தற்போதைய பேச்சின் போக்கு நாடு பிரிவதில்தான் முடியும்!

## எச்சரிக்கின்றார் கதிர்காமர் புதுடில்லியில் வைத்துப் பேட்டி



புதுடில்லி,ஜனவரி14

"விடுதலைப் புலிகள் விதிக்கும் கட்டளைக்கு இணங்கி அரசு நடக்கின்றது. இந்தப் போக்கில் தற்போதைய சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்தால் நாடு துண்டாடப்படுவதில்தான் அது போய் முடியும்."

- இவ்வாறு எச்சரித்திருக்கின்றார் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வெளிவிவகார ஆலோசகருமான லசஷ்மன் கதிர்காமர்.

புதுடில்லிக்கு விஜயம் செய்திருக்கும் லசஷ்மன் கதிர்காமர் அங்கு 'த இந்து' பத்திரிகைக்குப் பேட்டியளித்தார். அப்பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதுடில்லியில் பிரதிப் பிரதமர் எல்.கே.அத்வானி, நிதி அமைச்சர் ஜஸ்வந்சிங், காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி மற்றும் நட்வர்சிங் வெளியுறவுச் செயலாளர் கன்வல் சிபல் உட்பட பல முக்கியபிரமுகர்

(14.ஆம் பக்கம் பார்க்க)

## பாயிஸ் கொலை முயற்சியில் வடபகுதிக் கூலிப்பட்டாளம்

### கைதான 11 பேரும் விளக்கமறியலில்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸைக் கொலை செய்ய முயன்றார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் சிலாபம் பொலீஸாரினால் கடந்த சனிக்கிழமை இரவு இரணவிலவில் கைதுசெய்யப்பட்ட 11 பேரில் மூவர் வடபகுதி கூலிப் படை என வர்ணிக்கப்படும் ஆயுதக் குழு ஒன்றைச் சேர்ந்தவர்கள். பாயிஸைக் கொலை செய்யக் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்கள் என்று பொலீஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வருகிறது.

கைதான 11 பேரும் நேற்று சிலாபம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கைதானவர்களில வடபகுதியைச் சேர்ந்த மூவரும் தங்களைப் போராளிகள் குழு ஒன்றின் அங்கத்தவர்கள் எனக் கூறியிருக்கின்றனர். ஆயினும், அவர்கள் முன்னாள் உறுப்பினர்களா அல்லது இப்பொழுதும் உறுப்பினர்களாக உள்ளனரா என்பது தெரியவர

(14.ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடைச்சட்ட விவாதத்தின்போது கூட்டமைப்பின் ஒன்பது எம்.பிக்களும் எங்கே?

### சபையில் இல்லாததற்கு விளக்கம் கோருகிறார் ரெலோ ஸ்ரீகாந்தா

தமிழினத்தைக் கடந்த 23 வருடங்களாக மிகவும் பாரதூரமாகப் பாதித்துள்ள பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது.

அத்தருணத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் 5 எம்.பிக்களே சபைக்குச் சமுகமளித்திருந்தனர்.

இது ஒரு வேதனைக்குரிய நிகழ்வாகும். இந்தப் பிரச்சினையை ஒரு வருடத்துக்கு முன்னரே அ.விநாயகமூர்த்தி சமர்ப்பித்திருந்தார்.

ஒரு சில வாரங்களுக்கு முன்னர் நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்திலும் பிரேரணை இடம்பெற்றிருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை விவாதத்திற்கு பிரேரணை எடுத்துக் கொள்ளப்பட்ட போது தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் 5 பேர் மட்டுமே சபைக்கு வந்திருந்தனர்.

செல்வம் அடைக்கலநாதன் எம்.பி இந்தியா சென்றிருந்தார். கூட்டமைப்பின் மற்றைய 9 எம்.பிக்களும் எங்கே சென்றிருந்தனர்?

- இவ்வாறு ரெலோ இயக்கத்தின் முதல்வர் ஸ்ரீகாந்தா கேள்வி எழுப்பியுள்ளார். இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

கடந்த வெள்ளிக்கிழமை விவாதம் ஆரம்பமானபோது அரச தரப்பில் இரு அமைச்சர்கள் உட்பட 8 எம்.

(14.ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று பிரதமருடன் சந்திப்பு

கொழும்பு,ஜன.14

உயர் பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியேற்றம், பல்கலைக்கழக அனுமதியில் யாழ்.மாணவருக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி என்பவை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று பிரதமரைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

அலரிமாளிகையில் பகல் 11.00

(14ஆம் பக்கம் பார்க்க)

## நான்காம் சுற்றுப் பேச்சுக்கள் குறித்து ஹக்கீமிடம் விளக்கம் கோர முடிவு

### முஸ்லிம் எம்.பிக்களை ஒன்றிணைக்கும் அமைப்பு தீர்மானம்

கொழும்பு,ஜன.14

அரசு - புலிகளுக்கிடையில் நடைபெற்று முடிந்த நான்காம் சுற்றுப் பேச்சுக்களில் ஏற்பட்டதாகக் கூறப்படும் பிரச்சினைகள், முன்னேற்றங்கள் என்பன குறித்து அமைச்சர் ரவூக் ஹக்கீமை அழைத்து விளக்கம் கோருவது என்று சகல கட்சி முஸ்லிம் எம்.பிக்களையும் ஒன்றிணைக்கும் அமைப்புத் தீர்மானித்துள்ளது.

மேற்படி அமைப்பின் இரண்டாவது கூட்டம் நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. சென்ற கூட்டத்தில் கலந்துகொண்டவர்களைவிட இக்கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட ஐ.தே.க.எம்.பியான எம்.ஏ.எம்.மஹ்ரூப் மேலதிகமாகக் கலந்து கொண்டார்.

அவர் கூட்டத்தில் பேசுகையில் கட்சி, பேதம், பாராது சகல முஸ்லிம் தலைவர்களையும், எம்.பிக்களையும் இந்த அமைப்பின் கீழ் ஒன்றிணைப்பது அவசியம். குறிப்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் அணியினரைச் சேர்த்துக்கொண்டு செயற்படவேண்டும் என்றார்.

முஸ்லிம் எம்.பிக்கள் சகலரும் ஒன்றிணைந்து பொது வேலைத்திட்

(14.ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மின்விநியோகத்துக்கு ரூ.4கோடி செலவில் திட்டம்

### நேற்று ஒப்பந்தம் கைச்சாத்தானது

கொழும்பு,ஜன.14

யாழ்.மாவட்டத்தின் மின் விநியோகத்தை சீராக்குவதற்கான விசேட திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

வடக்குப் புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சும் எரிபொருள் மின்சக்தி அமைச்சும் இணைந்து கூட்டாக இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்துக்காக நான்கு கோடி ரூபா செலவிடப்படும். இது தொடர்பான ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டது. எரிபொருள் மின்சக்தி அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் அமைச்சர் கரு ஜயசூரிய உரையாற்றினார்.

அவர் தனது உரையில் கூறியதாவது:-

வடக்கு-கிழக்கு மக்களுக்கு மின் இணைப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு

(14.ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.முன்னணி சிரேஷ்ட உறுப்பினர்களுடன் தாய்லாந்துப் பேச்சுப் பற்றி ஜனாதிபதி நேற்று ஆராய்வு

கொழும்பு,ஜன.14

தாய்லாந்துப் பேச்சு உட்பட அரசின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பொதுஜன ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் நேற்றிரவு ஆராய்ந்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நடந்த இந்தச் சந்திப்பில் சிரேஷ்ட உறுப்பினர்களான மங்கள சமரவீர, அநுரா பண்டார நாயக்கா, நிமால் ஸ்ரீபாலடி சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர். தாய்லாந்துப் பேச்சுக்களின் அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக எட்டப்பட்டுள்ள முடிவுகள் குறித்து இச்சந்திப்பில் விசேடமாக ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப்பேச்சுக்களுக்கு எதிராக எதிர்கட்சிகள் கூட்டாக இணைந்து செயற்படுவது குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சகல எதிர்கட்சிகளும் கூட்டாக அரசின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து செயற்படுவது என சந்திப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அந்த வட்டாரங்கள் மேலும் கூறின. (ம-3)

## இந்தியாவிலுள்ள அகதிகளை அழைத்து வருவதுபற்றி கூட்டம்

கிளிநொச்சி,ஜன.14

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவில் அகதிகளாக வாழும் இலங்கைத் தமிழ் அகதிகளைத் தாயகத்துக்கு திருப்பி அழைத்து அவர்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளது.

(14.ஆம் பக்கம் பார்க்க)

# முதலாவது சமுர்த்தி வங்கி 18 இல் மருதங்கேணியில் திறப்பு

குடாநாட்டில் முதலாவது சமுர்த்தி வங்கி எதிர்வரும் 18ஆம் திகதி மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் திறந்துவைக்கப்படவிருக்கின்றது.

ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன் சமுர்த்தி வங்கிகள் அமைக்கப்பட்டு, அவை செயற்பட ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 10ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இதற்கான அனுமதியை சமுர்த்தி, கால்நடைகள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க வழங்கியுள்ளார்.

அமைச்சின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ்.அரசஅதிபர் எஸ்.பத்மநாதன், சமுர்த்தி உதவி ஆணையாளர் என்.சிவபாதசுந்தரம், கோப்பாய் பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஏ.சிவசுவாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச்சமுர்த்தி வங்கிகளுக்கென நிரந்தர கட்டடங்களும் அமைக்கப்படவுள்ளன. இவ்வருடம் யாழ்ப்பாணத்தில் 14 சமுர்த்தி வங்கிகளை அமைப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்வதற்கும் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உறுதியளித்துள்ளார்.

இதேவேளை - யாழ்ப்பாணத்தில் மக்கள் கருத்திட்டத்தை அமுல்படுத்த 25 லட்சம் ரூபாவை ஒதுக்கவும் அமைச்சர் இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-8)

# மத்தியகிழக்கு வேலை கொள்வோரின் கறுப்புப் பட்டியல் தயாராகிறது

கொழும்பு,ஜன.14

மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள வேலை கொள்வோரின் கறுப்புப் பட்டியல் ஒன்று தயாரிக்கபட்டு வருகிறது. இப்பட்டியலில் இடம்பெறுவோரின் வீடுகளுக்கு இனி எக்காரணம் கொண்டும் இலங்கைப் பணிப்பெண்கள் வேலைக்கு அமர்த்தப்படமாட்டார்கள்.

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து திரும்பிய இலங்கைப் பணிப்பெண்கள் வழங்கிய தகவல்கள், இலங்கைத் தூதரகங்களில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அப்பட்டியல் தயாரிக்கப்படும்.

அப்பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களின் வீடுகளுக்கு எக்காரணம் கொண்டும் இலங்கைப் பணிப்பெண்களை வேலைக்கு அமர்த்தக்கூடாது என்று தொழில் வாய்ப்பு அமைச்சர் மஹிந்த சமரசிங்க உத்தரவு பிறப்பிக்கவிருக்கிறார்.

இலங்கைப் பணிப்பெண்களை துன்புறுத்தும் மத்திய கிழக்கு தொழில் வழங்குநர்களின் பெயர்ப் பட்டியல் தூதரகங்களின் மூலம் பெறப்பட்டுள்ளன. இப்பட்டியல் இங்குள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பணியகத்திலும் பார்வைக்கு வைக்கப்படும். பணிப்பெண்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பும் முகவர் நிலையங்கள் இப்பட்டியலைப் பின்பற்றக் கோரப்படுவர். (ம)

## பல்கலை மாணவர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ் பல்கலைக்கழக அனைத்து மாணவர்களுக்குமான ஒன்றுகூடல் இன்று நண்பகல் 12 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளதாக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ம-ரி)

நிரந்தர நியமனம் கோரி

# தொண்டர் ஆசிரியர்கள் மறியல் போருக்கு முஸ்தீபு

யாழ்ப்பாணம்,ஜன.14

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்க வேண்டும் என்று கோரி எதிர்வரும் 20ஆம் திகதியில் இருந்து தொடர் மறியல் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளப்போவதாக வடமாகாண தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

கலவிச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளருக்கு ஒன்றியம் அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சையில் தெரிவான தொண்டர் ஆசிரியர்களுக்கு இவ்வாண்டு ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கடந்த ஜூலை மாதம் உறுதியளித்திருந்தார். எனினும் இந்த உறுதிமொழி இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இதையிட்டு நாம் மிகுந்த ஏமாற்றமடைந்துள்ள நிலையில் உள்ளோம்.

எம்மை நிரந்தர நியமனம் செய்யாத பட்சத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் தொடர் மறியல் போராட்டத்தில் ஈடுபடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாவோம்.

இப்படி அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3-ரி)

# உலக வங்கி உபதலைவர் சனியன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்.குடாநாட்டுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு உலக வங்கியின் உயர் அதிகாரிகள் குழுவொன்று எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.வருகின்றது. உலக வங்கியின் உப தலைவர் டாக்டர் மீக்கோ நிஸி மிசு(Mieko Nishi Mizu) தலைமையில் உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பீற்றர் கரோல்ட்(Peter Harrold), டாக்டர் நரேஸ் துரைசுவாமி ஆகியோர் இக்குழுவில் வருகின்றனர்.

இக்குழுவினர் 17ஆம் திகதி காலை அரச அதிபரைச் சந்தித்த பின்னர், வட்டுக்கோட்டையில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் விஜயம் செய்யவுள்ளனர். அங்கு நடைபெறவுள்ள கூட்டம் ஒன்றில் அவர்கள் கலந்துகொள்வார்கள். இக்கூட்டத்தில் அரச உயர் அதிகாரிகள் மற்றும் கல்விமான்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பின்னர் அங்கிருந்து உடுவிலுக்குச் செல்லவுள்ள இக்குழுவில் உள்ள அகதி முகாம்களையும் பார்வையிட்ட பின்னர் கொழும்பு திரும்பவுள்ளனர். (ம-8)

## சங்கரத்தையில் மக்கள் வங்கியின் விசேட கருமபீடம்

சங்கானை மக்கள் வங்கிக் கிளையின் விசேடகருமபீடம் (நடமாடும சேவை)ஒன்று சங்கரத்தைச் சந்திக்கு அருகில் இன்று முப. 10.30 மணிக்கு திறக்கப்படவுள்ளது.

வாரத்தில் பிரதி செவ்வாய்க் கிழமை தோறும் இக்கருமபீடம் செயறபடும் அப்பகுதி மக்களின் ஆதரவைப்பொறுத்து எதிர்காலத்தில் செயற்பாட்டு நாள்கள் அதிகரிக்கக் கூடும் எனவும்-

இம்முயற்சி பயனளிக்கும் பட்சத்தில், இதேபோன்று கருமபீடங்களை வலிகாமம் மேற்குப்பகுதியில் மேலும திறப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் -

சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளை தெரிவித்துள்ளார். (ம-29)

# அரசியல் லாபம் கருதி மாநகர சபையை அவமதிக்கிறார் அமைச்சர் மகேஸ்வரன்

## யாழ்.மேயர் செல்லன் கந்தையன் போர்க்கொடி



யாழ்ப்பாணம்,ஜன.14

தனது அரசியல் இலாபத்துக்காக மாநகரசபையின் செயற்பாடுகளை அவமதிக்கும் விதத்தில் செயற்பட்டு வருகிறார் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன்.

யாழ்.மாநகர சபை நிர்வாகத்தினர் நேற்று நடத்திய கறுப்புப்பட்டி போராட்டம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட யாழ்.மேயர் செல்லன் கந்தையன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் தலைமையிலான குழுவினர், யாழ்.மாநகர சபை ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்தில் சுகாதார மற்றும் சுத்திகரிப்பு பணிகளை மேற்கொள்வது பற்றி தம்பாட்டில் ஆராய்ந்திருக்கிறார்கள். அமைச்சர் மகேஸ்வரனின் அழைப்பிலேயே அவர்கள் இங்கு வந்திருக்கின்றனர். அவர்களது வருகை தொடர்பாக மாநகர சபை நிர்வாகத்துக்கு எதுவுமே தெரிவிக்கப்படவில்லை.

கொழும்பு மாநகர சபையின் மேயரின் அனுமதி இன்றியே பிரதி மேயர் தலைமையிலான குழு இங்கு வருகைதந்தது என்று எனக்குத் தெரிய வந்திருக்கிறது.'

சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு பணிகள் தொடர்பாக அவர்கள் குடாநாட்டு மக்களுக்கு உதவ முன்வந்ததை நான் வரவேற்கிறேன். மாநகர மக்களும் வரவேற்கிறார்கள். ஆனால், சில மரபுகளை, ஒழுங்குகளை உதாசீனம் செய்துவிட்டு பொதுப்பணி புரிவது அழகல்ல. பிரதி முதல்வரின் வருகை கட்சி சார்ந்த விஜயம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் மகேஸ்வரன் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர். கொழும்பு மாநகர சபையும் ஐக்கிய தேசியக் கட்சி நிர்வாகத்தில் உள்ளது. அவர்கள் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கள் கட்சியை வளர்ப்பதில் எமக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. ஆனால், எமது பிரதேசத்தில் - யாழ். மாநகரசபைப் பிரதேசத்தில் - எந்தத் திட்டங்களை மேற்கொள்வதாயினும் மாநகர சபைக்கு தெரியப்படுத்துவது அவர்களது கடப்பாடு. நாடு முழுவதும் பேணப்படுகின்ற மரபும் கூட. ஆனால், அமைச்சர் மகேஸ்வரன் இந்த மரபை அரசியல் நாகரிகத்தை உதாசீனம் செய்துவிட்டார். இது எமது நிர்வாகத்தை இழிவுபடுத்தும் செயலாகும்.

மாநகர சபை நிதிப் பற்றாக்குறையுடன் செயற்பட்டு வருகின்றது. நான் கொழும்பு சென்று, என்னால் இயன்ற முயற்சிகளைச் செய்து, உதவிகளைப் பெற்று நிர்வாகத்தை சிறப்பாக இயக்குவதற்கு முயன்று வருகின்றேன்.

எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்ற எண்ணம் அமைச்சருக்கு இருந்தால் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலாயினும் நிதி ஒதுக்கீடுகளைச் செய்து தந்திருக்கலாம். இது பற்றி நாங்கள் கடிதமூலம் கேட்டுக்கொண்டபோதும் இதுவரையும் எவ்விதபதிலும் தரவில்லை. இப்படியான நிலையில்தான் ஜனநாயக பாரம்பரியங்களை மறந்து யாழ். முதல் வரையும் சபையையும் மதிக்காது அமைச்சர் செயற்பட்டு வருகிறார். - என்றார் மேயர் செல்லன் கந்தையன்.

*கேள்வி :* யாழ்மாநகர சபையின் கரையோரப் பிரதேசங்களில் சுகாதாரச் சீர்கேடுகள் இல்லை என்று கூறுகிறீர்களா?

*மேயர்:* இல்லை, அப்படிக் கூற முடியாது. பல பிரச்சினைகள் உள்



என. எமது பக்கத்தில் குறைபாடுகளும் பலவீனங்களும் உள்ளன. ஆனால், அதற்காக சபை நிர்வாகமோ, மேயரோ அவமதிக்கப்படக்கூடாது.

கரையோரப் பகுதிகளின் சுகாதார நிலையை மேம்படுத்த கொழும்பு மாநகரசபை எமக்கு உதவுமானால் அது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். ஆனால், அது அரசியல் நோக்கம் கொண்டதாக அன்றி மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டும் - என்றார் மேயர். (ஐ-10-5)

# மாநகரசபையில் நேற்று கறுப்புப்பட்டிப் போராட்டம்

யாழ்.மாநகர சபைக்குள் நுழையும் தென்பகுதியைச் சேர்ந்தவர்களும ஏனைய முக்கிய பிரமுகர்களும் சபையின் தனித்துவத்தை பேணத் தவறியமையை கண்டித்து யாழ்.மாநகர சபையில் நேற்று கறுப்புப் பட்டி அணிந்து எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் தலைமையில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. மாநகர சபை உறுப்பினர்கள், ஊழியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பகல் 11 மணியளவில் கறுப்புப் பட்டிகளை அணிந்தவாறு மாநகர சபை வாயிலில் அனைரும் கூடியிருந்தனர். இந்த எதிர்ப்பு நடவடிக்கையின் இறுதியில் முதல்வர் தலைமையில் கண்டனக் கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது. சபை உறுப்பினர்களான த.சுபத்திரன் (ஈ.பி.ஆர்.எல்.எவ்), கிங்ஸ்லி கணேசன் (ஈ.பி.டி.பி), செ. இருதயராஜன் (புளொட்), செ.விஜயரட்ணம்(கூட்டணி) ஆகியோர் உரையாற்றினர்.

இந்து கலாசார அமைச்சரின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் வருகை தந்த கொழும்பு பிரதி மேயர் தலைமையிலான குழுவினர் யாழ்.மாநகர சபையின் அனுமதியின்றிச் செயற்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்தே இந்தக் கறுப்புப் பட்டிப் போராட்டம் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் ஒருமணி நேரம் இடம்பெற்ற நேற்றைய எதிர்ப்பு நடவடிக்கையால் மாநகரசபையின் நாளாந்தப் பணிகள் பாதிக்கப்பட்டன. (ம-5-51)





யாழ். மாநகர சபை எல்லைக்குள் வரும் பிரமுகர்களும் ஏனைய சபையினரும் மாநகர சபையின் இறைமையை மதிக்காமல் செயற்படுவதற்கு ஆட்சேபம் தெரிவித்து முதல்வர் செல்லன் கந்தையன் தலைமையில் மாநகர சபை நிர்வாகத்தினர் கறுப்புப்பட்டி அணிந்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம். (படம்: வசந்தன்)

# கேணல் கிட்டு பூங்கா துரிதமாகப் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.14

மூத்த தளபதி கேணல் கிட்டுவினதும் அவருடன் உயிர்நீத்த தோழர்களதும் 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வை நாளை மறுதினம் வியாழக்கிழமை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க குடாநாடு தயாராகி வருகின்றது. அதன் ஒரு கட்டமாக முத்திரைச் சந்தியில் உள்ள கேணல் கிட்டுப் பூங்கா துரிதமாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

பூங்காவின் தெற்குப்புற வாசல்



பகுதி திருத்தியமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டுள்ளது. நிலப்பகுதி தார் ஊற்றப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளது.

கேணல் கிட்டுவின் உருவச்சிலை அமைந்துள்ள இடத்தில், அவரது உருவப்படத்தை வைத்து மலர் வணக்கம் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தேசியக்கொடியேற்றலுக்கான கொடிக் கம்பமும் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபைப் பணியாளர்கள் கடந்த இரு தினங்களாக இப்பணியில் முழுவீச்சில் ஈடுபட்டு வருகின்றனர். (ம-ரி)

## வடமராட்சி அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.14

வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான அவசர கூட்டம் எதிர்வரும் வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் நடைபெறவிருக்கின்றது.

கூட்டத்துக்கு வரும்போது பாடசாலைகளின் ஆசிரியர், மாணவர்கள் எண்ணிக்கை மற்றும் பௌதிக வளம் தொடர்பான விவரம் ஆகியவற்றை எடுத்துவருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கேட்டுள்ளார். (ம-3)

# பொருளாதாரத்தடை விதித்தால் பதிலடி; அமெரிக்காவுக்கு வடகொரியா மிரட்டல்

சியோல்,ஜன.14

பொருளாதாரத் தடை விதித்தால அமெரிக்காவுக்குத் தகுந்த பாடம் புகட்டுவோம் என வடகொரியா மிரட்டியுள்ளது.

அணுஆயுதப் பரவல் தடை உடன்பாட்டிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை வடகொரியா விலகிக்கொண்டது. இதனால், வடகொரியாமீது அமெரிக்காவுக்கு கோபம் அதிகரித்தது.

இந்நிலையில், ஏவுகணை சோதனையை மீண்டும் தொடங்கப் போவதாக வடகொரியா அறிவித்தது. இதனால், அமெரிக்காவுக்கும் வடகொரியாவுக்கும் இடையே பதற்றம் அதிகரித்தது. தற்போதைய பதற்றத்துக்கு அமெரிக்காவே காரணம் என வடகொரியாவை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகையில் வெளியாகியுள்ள செய்தி வருமாறு:-

அணு ஆயுதங்களை வைத்திருக்கும் வடகொரியாமீது தாக்குதல் நடதத்போவதாக அமெரிக்கா அச்சுறுத்தி வருகிறது. அணு ஆயுதப் பரவல் தடை உடன்பாட்டிலிருந்து விலகியதற்காக வடகொரியாமீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதிக்குமானால் அதற்கு சரியான பதிலடியை வடகொரியா கொடுக்கும். அமெரிக்காவை எதிர்க்க கொரிய மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு போராடுவார்கள் - என்று உள்ளது.

(ஐ)

# வடகொரியாவை அமெ. தாக்காது!

வாஷிங்டன்,ஜன.14

வடகொரியா மீது போர் தொடுக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஆனால், அணுஆயுத திட்டங்களைக் கைவிடுமாறு அந்த நாட்டிடம் தொடர்ந்து அமெரிக்கா கூறி வருகிறது. வடகொரியாவின் அணு ஆயுத திட்டங்கள்தான் தொடர்ந்து கவலை அளிப்பதாக இருக்கிறது என அமெரிக்க வெளியுறவுத்துறை பத்திரிகைத் தொடர்பாளர் ரிச்சர்ட் பவுச்சர் கூறினார்.

பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தயாரிக்கும் திட்டத்தைக் கைவிடுமாறு ஈராக் மற்றும் வடகொரியாவிடம் சர்வதேச சமுதாயம் தொடர்ந்து கோரி வருகிறது. பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்கவே விரும்புகிறோம். ஈராக்கைப் பொறுத்தவரை ஐ.நா.சபை சில தீர்மானங்களை நிறைவேற்றி அவற்றை அமுலபடுத்துமாறு ஈராக்கிடம் கூறி வருகிறது. ஈராக் இவற்றை நிறைவேற்றாதது மட்டுமன்றி ஏமாற்ற முயல்கிறது. உலக நாடுகளின்கருத்தை மதிப்பதில்லை என்று சொன்னார்.

வடகொரியாவைப் பொறுத்தவரை அதன் பிரச்சினையே வேறு. அதைக கையாளும் முறையும் வேறு என்று அவர் கூறினார்

(ஐ).

ஈராக்கில் தேடுதல் நடத்தி முடிக்க

# ஐ.நா. ஆயுதப்பரிசோதகர்களுக்கு ஒரு வருடகால அவகாசம் தேவை!

## சோதனைக் குழுவின் பேச்சாளர் அறிவிப்பு

லண்டன்,ஜன.14

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் உள்ளனவா? எனச் சோதனையிடும் தமது பணி, பூரணமாக நிறைவேற்றப்பட குறைந்தது ஒரு வருட காலம் தேவைப்படும்.

- இவ்வாறு ஐ.நா.ஆயுதப் பரிசோதகர்கள் சார்பாக பேசுபவர் அறிவித்துள்ளார். ஈராக் மீதான இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்க அமெரிக்கா பிரயத்தனம் மேற்கொண்டுள்ள வேளையில் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

ஐ.நா. அமைப்பானது சர்வதேச அணுசக்தி நிறுவனத்தைச் சேர்ந்த மார்க் வொஜ் டெக்கி பி.பி.ஸிக்கு தகவல் தருகையில், 'ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் தொடர்பான ஐ.நா. ஆயுதபரிசோதகர்களின் சோதனை பூரணமானதாகவும் நம்பத் தகுந்ததாகவும் இருக்க வேண்டுமாயின், சோதனை முடிய ஒரு வருட காலம் தேவை என்று தெரிவித்தார்.

இதனால்தான் திட்டமிட்டு வரும் ஈராக் மீதான இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள அமெரிக்கா எதிர்ப்புகளை எதிர்நோக்க வேண்டியிருக்குமென்று கருதப்படுகிறது. ஒரு வருட கால அவகாசம் ஆயுதப் பரிசோதகர்களுக்கு வழங்கப்படா விட்டால் ஜதார்த்தத்தில் அவர்கள் கண்டுபிடிப்பது வெறும் பூஜ்சியமாகவே இருக்கும் என்று வொஜ்டெக்கி மேலும் தெரிவித்தார்.

ஐ.நா. பாதுகாப்புச்சபை முன்னதாக நிறைவேற்றிய தீர்மானத்தின்படி ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்கள் தமது பணி தொடர்பான அறிக்கையை எதிர்வரும் 27 ஆம் திகதி சமர்ப்பிக்க வேண்டும், ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றே அந்த அறிக்கையில் தெரிவிக்கவே அதிக வாய்ப்புள்ளது. இந்தக் கால அவகாச விடயம் குறித்து அமெரிக்க பாதுகாப்பு கொள்கைச் சபையின் தலைவர் ரிச்சேர்ட் பேர்வின் கூறுகையில் சிலவருடங்களுக்கு முன்னர் ஈராக்கில் சோதனை நடத்தப்பட்ட இடங்களிலேயே ஆயுத பரிசோதகர்கள் தற்போதும் தேடுதல் நடத்துகிறார்கள். இதனால், பேரழிவு ஆயுதங்கள் எதனையும் ஈராக்கில் அவர்கள் கண்டுபிடிக்கப்போவதில்லை. வேறு எங்கு செல்வது என்று தெரியாததாலேயே அவர்கள் போன இடங்களுக்கு மீண்டும் செல்கிறார்கள் என்று தெரிவித்தார்.

(ஒ)



ஈராக்கில் ஆயுதப் பரிசோதனைக்கு புறப்படும் ஐ.நா. குழுவினர்

# பங்களாதேஷில் நுளம்பு ஒழிப்பு பணியில் விமானங்கள், ஹெலிகள்

டாக்கா,ஜன.14

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நுளம்பு ஒழிக்க விமானம்மூலம் மருந்து தெளிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நுளம்புகளால் மலேரியா, டெங்கு காய்ச்சலுக்கு ஆண்டுதோறும் பலர் உயிரிழக்கின்றனர். இதையடுத்து, டாக்கா மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் சிறிய விமானங்கள், ஹெலிகொப்டர்மூலம் 'லார்விசைட்' எனப்படும் நுளம்பு மருந்துகளைத் தெளிக்க அரசு ஒப்புக்கொண்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மருந்து தெளிப்பதால் நகரின் இயற்கைத் தன்மை பாதிக்கப்படும் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இதையடுத்து, மருந்து தெளிக்கும்போது தேனீக்கள், பட்டாம்பூச்சிகள் மற்றும் இதர பூச்சிகள் பாதிக்கப்படாமல் இருக்க நடவடிக்கை எடுப்பது குறித்து அதிகாரிகள் விவாதித்து வருகின்றனர்.

(ஐ)

# குற்றப்பத்திரிகையின் நகல் வைகோவிடம் வழங்கப்பட்டது

சென்னை,ஜன.14

பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ம.திமு.க. பொது செயலர் வைகோ உட்பட எட்டுப் பேருக்கு நேற்று குற்றப்பத்திரிகை நகல் வழங்கப்பட்டது. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாக பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வைகோ கடந்த ஜுலை 11 முதல் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். வைகோ மீது கடந்த டிசெம்பர் 30 அன்று குற்றப்பத்திரிகை தமிழக அரசால் தாக்கல் செய்யப்பட்டது. இக்குற்றப்பத்திரிகையை ஜனவரி 2 அன்று நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

குற்றப்பத்திரிகையின் நகலை நேற்று வைகோவுக்கு வழங்கிய பூந்தமல்லி பொடா நீதிமன்ற நீதிபதி அடுத்தகட்ட விசாரணையை பெப்ரவரி 10 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

உலக அரங்கில்



இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் கடும் குளிர் காரணமாக சுமார் 750 பேர் உயிரிழந்துள்ளனர். வீதி ஓரங்களிலும் குடிசைகளிலும் வாழும் ஏழைகளே குளிரால் இறந்துள்ளனர்.

பங்களாதேஷில் தனது பேரக் குழந்தைகளை குளிரிலிருந்து பாதுகாக்க முயற்சிக்கும் முதியவர் ஒருவரைப் படத்தில் காணலாம்.

## அன்பகத்தில் கண்ணகி சிலை



சென்னை தேனாம்பேட்டை அன்பகத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதியால் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்ட கண்ணகி சிலையையே படத்தில் காண்கிறீர்கள். திறப்பு விழாவில் கலந்து கொண்ட தொண்டர்களில் ஒரு பகுதியினர்.

விமான மூலமான தற்கொலைத் தாக்குதல்களிலிருந்து

# பிரிட்டிஷ் ராணியை பாதுகாக்க இரும்பினால் அறைகள் அமைப்பு

லண்டன்,ஜன.14

அல்கெய்டா அமைப்பின் தாக்குதலில் இருந்து தப்பிக்க பிரிட்டிஷ் ராணியின் அரண்மனையில் ரூபா 6 கோடி செலவில் இரும்பால் செய்யப்பட்ட பாதுகாப்பு அறைகள் கட்டப்பட்டுள்ளன.

வின்ட்சர் கோட்டை, பங்கிங்ஹாம் அரண்மனை ஆகிய இடங்களில் இத்தகைய பாதுகாப்பு அறைகள் கட்டப்பட்டுள்ளன.

18 அங்குல கனமுள்ள ஸ்டீலைப் பயன்படுத்தி இந்த அறைகள் கட்டப்பட்டுள்ளன.

விஷவாயு, வெடிகுண்டுத் தாக்குதல் அல்லது பயங்கரவாதிகளின் கொலைமுயற்சி ஆகியவற்றிலிருந்து ராணியின் குடும்பத்தினர் தப்பிக்க இந்த அறைகள் கட்டப்பட்டுள்ளன என்று 'சண்டே டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த அறைகளில் படுக்கைககள் உள்ளன. 15 நாளகளுக்குத் தேவையான உணவும் தண்ணீரும் உள்ளன.

தகவல் தொடர்பு சாதனங்களும் இந்த அறைக்குள் வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன் ராணி வசித்து வந்த 'கிளாரன்ஸ் ஹவுசி'லும் இதேபோன்ற அறை கட்டப்படும். அந்த வீட்டுக்கு இளவரசர் சார்ள்ஸ் குடியேற உள்ளார்.

இந்த அறைகளை துப்பாக்கி குண்டு துளைக்க முடியாது; தீப்பிடிக்காது; சிறிய பீரங்கி, சிறிய விமானம் மூலம் தாக்கினாலும் இந்த அறை சேதமடையாது.


லண்டனில் ஹீத்ரு விமான நிலையத்துக்குச் செல்லும் வழியில் வின்ட்சர் கோட்டை உள்ளது.

இதனால், பாதுகாப்பு அதிகாரிகள் இங்கு மிகுந்த எச்சரிகையுடன் உள்ளனர்.

அல்கெய்டா தற்கொலைப் படையினர் விமானம் மூலமாக இந்தக் கோட்டையைத் தாக்க வாய்ப்புள்ளது என்று கூறுகின்றனர்.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிககாவில் அல்கெய்டா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய பிறகு பிரிட்டிஷ் ராணியின் குடும்பத்துக்காக இததகைய பாதுகாப்பு அறைகள் கட்டப்பட்டுள்ளன. (ஐ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| பூவுலகில் | புகழ்உலகில் |
| --- | --- |
| 26 - 04 - 1943 | 25 - 12 - 2001 |

## தம்பையா நவரட்ணம்
### (சந்திரன்)

திதி: 14-01-2003 (சொர்க்கவாசல் ஏகாதசி)

காலனுடன் செல்லவில்லை நீங்கள்
இன்னும் உங்கள் விஸ்வரூபம்
எங்கள் உயிரோடு... உணர்வோடு...

பிரியாதிருக்கும்:
மனைவி, பிள்ளைகள்.

(13099)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



மந்துவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொடிகாமம் அஞ்சல் அலுவலகத்தின் சிரேஷ்ட அஞ்சலரும் சமூகசேவையாளருமான

**திரு.வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம்**

அவர்கள் 05. 12. 2002 அன்று யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி அவரின் சமூகப்பணிகள் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

*மந்துவில் மேற்கு.* (12958) - நண்பர்கள்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 12 - 03 - 1912 | 15 - 12 - 2002 |

## அமரர் வேலுப்பிள்ளை தம்பையா

*பாடுபட்டு நிதம் உழைத்து பாலர் எமை வளர்த்தெடுத்து*
*காலமதில் கல்வி தந்து ஞாலமதில் சிறக்கவைத்து*
*குதூகலமாய் வாழவைத்த குடும்பத்தின் குலவிளக்கே*
*மாதம் பல போனாலும் மறப்போமோ உங்கள் அன்பை?*

இன்று (14.01.2003) செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*டிப்போ முன்பாக,*
*கோகுல வீதி,*
*கோண்டாவில்.*

(13105)

சுப்பிரமணியம், வேலாயுதம்,
சண்முகசுந்தரமூர்த்தி,
கோவிந்ததாஸ், தங்கமுத்து,
மகேஸ்வரி, கனகமணி
குடும்பத்தினர்.


# சுடர் ஒளி




- உயர் பாதுகாப்பு வலய மீள் குடியமர்வுகளில் புலிகளின் சாணக்கியமும் அரசின் தந்திரமும்.
- குடாநாட்டில் பரவும் காய்ச்சலும் நடவடிக்கை எடுக்காத தரப்புகளும்.
- இந்திய அரசின் வஞ்சக வலையில் சிக்கி கடலில் சங்கமமான தமிழீழத்தின் சொத்து.
- விடியலைத் தேடிய வனிதையர் முடிவைக் காணாத துயரத்தில் லெபனானில் சோகம்.
- அகதியானவர் மீண்டு வந்தால் அவதியாகிவிடும் சூழ்நிலைகள் - நேரடி
- புலிகளின் அலுவலகத்தில் அதிரடிச் சோதனை புலனாய்வுப் பொறுப்பாளர் கிடைக்காது ஏமாற்றம்
- சிங்களத் தீவிரவாதிகள் கண்ணோட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை
- தி.மு.கவுடன் உறவை முறிக்க பா.ஜ.க. துடிக்கிறதா?
- பொங்கல் வந்தாச்சு (சிறுகதை)
- மற்றும் ஆக்கங்கள்

14-01-2003 இதழில்

விலை 14/-

(C/26029)

உதயன்

## சிரான் அமைப்பு சீராகச் செயற்படுமா?

வடக்கு - கிழக்கு உடனடி மனிதாபிமான புனர் வாழ்வு நடவடிக்கைக்கான உபகுழுவினர் (சிரான்) தலைமைச் செயலகக் கட்டமைப்புப் பணிகளை மேற் கொள்வதற்கு நிதி உதவி ஏதும் வழங்கப்படவில்லை. இதன்காரணமாக இந்தப் பணிகளை முன்னெடுப்பதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

உபகுழுவின் செயலகப் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வந்து ஓராண்டு ஆகிவிட் டது. அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச் சாத்தாகி அடுத்த மாதத்துடன் ஓராண்டு பூர்த்தியா கின்றது. இருதரப்புக்கும் இடையில் நேரடிப் பேச்சுகள் ஆரம்பமாகியும் நான்கு மாதங்கள் கடக்கின்றன.

1994-95இல் சந்திரிகா குமாரதுங்கவின் அரசுடன் பேச்சு நடத்திய காலத்திலும் சரி, அதற்குப் பின்னர் இப்போது பிரதமர் ரணிலின் அரசுடன் பேச்சு நடத்து கின்றபோதும் சரி, புலிகள் வெளிப்படுத்தி வந்த - வருகின்ற - முக்கியமான நிலைப்பாடு ஒன்றுதான். இக்காலகட்டத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வருடம் தோறும் தனது இயக்க அரசி யல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் - சரித்திர முக் கியத்துவம்மிக்க - மாவீரர் தின உரைகளிலும் வலியு றுத்திய விடயமும் அதுதான்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் தமது மக்களின் அன்றாட வாழ்க் கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்ட நிலையில் - ஒரு நல்லெண்ணப் புறச் சூழ்நிலையில் - அமைதித் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்பதே புலிகளின் திட்டவட்டமான நிலைப்பாடாக இருந்து வருகின்றது.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் தனது கடப்பாட்டைக் கூட நிறைவுசெய்வ தற்கு சந்திரிகா அரசு தவறியதே 1994 - 95இல் அவர் புலிகளுடன் நடத்தி, பேச்சுக்கள் இடையில் முறிந்ததற் குக் காரணம்.

அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு, நல்லெண்ணப் புறச் சூழ்நிலையில் பேச்சுக்களை நடத் தலாம் என்பதைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்ககூட இப்போது புலிகளு டன் பேச்சு நடத்த முன்வந்தார்.

தமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குப் புலிகள் தீர்வு காணும் விதத்தில், வடக்கு - கிழக்கில் நிர்வாகத்தை இரண்டு வருடங்களுக்கு புலிகளிடம் ஒப்படைக்கவும் தாம் தயார் என்று தாம் பிரதமராக வருவதற்கு முன்னரே - பொதுத் தேர்தல் பிரசாரக் காலத்தில் - ரணில் விக்கிரமசிங்க அறிவித்தது கூட இந்தக் கொள்கை இணக்கத்தின் அடிப்படையில் தான்.

தற்போதைய சமாதான முயற்சிகளிலும் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை முக்கியத்துவப்படுத்தியே புலிகள் வந்துள்ளனர்.

ஆனால், இதுவரை உரிய பலன் கிட்டவில்லை என்பதுதான் யதார்த்தம். அதனால் புலிகளுக்கு ஏற்பட்ட சீற்றத்தைக் கடந்த சுற்றுச் சமாதானப் பேச்சுகளில் அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் சந்திக்கவேண்டியதாயிற்று.

"அரசியல் விடயங்கள் - அடிப்படை விவகாரங்கள் - குறித்து இந்த முதல் மூன்று சுற்றுப் பேச்சுக்களிலும் அளவுக்கு அதிகமாகப் பேசி கணிசமான அடைவுக ளைப் பெற்றுள்ளோம். ஆகவே, இப்போது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளான மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, அபிவிருத்தி ஆகிய பணிகள் குறித்து ஆராய்வதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளோம்" - என்று கடந்த சுற்றுப் பேச்சுகளின் முதல்நாள் முடிவிலேயே அரசுத் தரப்புக் குழுத் தலைவர் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிடும் அளவுக்கு, அன்றாடப் பிரச்சினை விவகாரம் நான்காம் சுற்றுப் பேச்சுக்களின் ஆரம்பத்திலேயே சீற்றமாக வெடித்தது.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற் கான முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றே 'சிரான்' உபகுழு அமைப்பாகும். அது உருவாக்கப்பட்டு மூன்று மாதங்களாகிவிட்டன. தலைமைச் செயலகம் திறக் கப்பட்டு ஒரு மாதம் தாண்டிவிட்டது.

இன்னும் அதற்கு உரிய நிதி மற்றும் வசதிகள் வழங்கப்படவில்லை. அதனால் அதன் கட்டமைப் பைக்கூட நிறுவமுடியவில்லை என்று சுட்டிக்காட்டப்படு கின்றது.

இந்தத் தாமதங்களுக்கு - பின்னடைவுகளுக்கு - விரைந்து தீர்வு காணப்படும் என்று அரசுத் தரப்பில் கடந்த சுற்றுப்பேச்சுக்களில் உறுதி கூறப்பட்டிருக் கிறது.

'சிரான்' அமைப்பு 'சீரியமாக' செயற்படுவதற்கான ஏற்பாடுகளை அடுத்த ஒரு வாரத்திற்குள் செய்து தருவதாக கடந்தவாரம் நடைபெற்று முடிந்த நான் காம் சுற்றுப் பேச்சுக்களில் உறுதியுரை வழங்கப் பட்டுள்ளது.

அது செயற்படுத்தப்படுமா என்பது இந்த வாரத்தில் தெரியவந்துவிடும். அதுவரை பொறுத்திருப்பதே நல்லது.

### குடாநாட்டில் காணப்படும்

# உயர் பாதுகாப்பு வலயம் என்பது நகைப்புக்கிடமான ஒன்றாகும்!

## யாழ்.வந்த கொழும்பு மாநகராட்சி குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.14

குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் என்பது நகைப் புக்கிடமான ஒன்றாகவே எமக்குத் தெரிகிறது.

கொழும்பு மாநகரசபை பிரதி மேயர் தலைமையிலான குழுவினர் இவ்வாறு தெரிவித்தனர்.

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் அழைப்பின் பேரில் கொழும்பு மாநகரசபையின் பிரதி மேயர் எம்.ஆஸாத் எஸ்.சாலி உறுப்பினர்கள் சி.பி.வைராம், பிரேம ஜயந்த ஆராய்ச்சி மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இக்குழுவினர் குருநகர் மற்றும் பாஷையூர் ஆகிய கரை யோரப் பிரதேசங்களைப் பார்வையிட்டனர். அதன் பின்னர் பிரதி மேயர் மற்றும் உறுப்பினர்கள் 'உதயன்' செய்தியாளரிடம் உரையாடினர். அவ்வேளையிலேயே, உயர் பாதுகாப்பு வலயம் நகைப்புக்கிடமான ஒன்று என ஒருமித்த குரலில் கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேச எல்லையிலிருந்து குறைந்தது ஒரு மைல் தொலைவுக்கு குடியிருப்புகள் இருக் காது என்றே எண்ணியிருந்தோம். ஆனால், இங்கு வந்து நேரில் பார்த்தபோது எமக்கு வேடிக்கையாக இருந்தது.

மக்களை அவர்களது சொந்த வீடுகளில் இருந்து எழுப்பி விட்டு, உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறி, அந்த வீடுகளில் இராணுவம் நிலைகொண்டுள்ளது. அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள், தமது வீடுகளில் இருந்து சில அடிகளே தள்ளி குடிசைபோட்டு வாழ்கின்றனர். இவ்வாறான உயர் பாதுகாப்பு வலயம் நகைப்புக்கிடமான ஒன்றாகவே எமக்குத் தெரிகிறது.

மக்கள் குடியிருப்புகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. மக்கள் தமது குடியிருப்புக்களில் இருந்து சில அடிகள் தூரத்தில் குடிசைகளில் வாழ நேரிட்டுள்ளது. இது மனித உரிமை மீற லாகும்.

சமாதான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கொழும்பில் பாதுகாப்புக் கெடுபிடிகள் தளர்த்தப்பட்டுவிட்டன.

அங்கு நள்ளிரவிலும் கேளிக்கை நிகழ்ச்சிகள் இடம்பெறு கின்றன. இராணுவ முகாம்களின் அருகே மக்கள் தமது சொந்த வீடுகளில் குடியிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்கள் எதற்காக என்று எமக்குப் புரியவில்லை.

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக யுத்தம் தொடர்ந்தது. இதனால் இன, மத வேறுபாடின்றி அனைத்து மக்களும் துய ரங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்தோம். ஐ.தே.மு. ஆட்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சியால் இப்போது சமாதான நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன.

20ஆண்டுகள் தொடர்ந்த யுத்தத்தின் பின்னர் இப்போது தான் மக்கள் நிம்மதியாக உள்ளனர். ஆகவே, இன்னும் 20 ஆண்டுகள் சமாதானப் பேச்சுகள் தொடர்ந்தாலும் பாதக மில்லை.

மேலும் யுத்தத்தில் இறந்த பல படையினரின் சடலங்களை விடுதலைப் புலிகள் முன்னைய அரசிடம் கையளிக்க முன் வந்துள்ளனர். ஆனால், அவற்றை ஏற்க பொ.ஐ.மு.அரசு மறுத் துள்ளது. இத்தகவலை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன் ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். இதனை, ஜனாதிபதியோ, முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரோ இதுவரை மறுக் காது மௌனம் சாதிக்கின்றனர். ஆகவே, அன்ரன் பாலசிங்கம் கூறியது உண்மை என்று நிரூபனம் ஆகின்றது.

இந்த நாட்டுக்காக உயிரைத் தியாகம் செய்த இராணுவத் தினரின் சடலங்களைக் கையேற்று உரிய மரியாதை செலுத்த ஜனாதிபதியும், முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் தவறிவிட்டனர். இது மனித உரிமை மீறல் மட்டுமல்ல, போர்க் குற்றமுமாகும்.

இலங்கையின் அரசமைப்புப்படி ஜனாதிபதிமீது இங்குள்ள நீதிமன்றங்களில் வழக்குத் தொடரமுடியாது.

ஆகவே, போர்க் குற்றங்களுக்கான சர்வதேச நீதிமன்றத் தில் போர்க் குற்றச்சாட்டின் பேரில் ஜனாதிபதி மற்றும் முன் னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்மீது வழக்குத் தொடர்ந்து தண்டனை கிடைக்கச் செய்யவேண்டும்.

என்று அவர்கள் தெரிவித்தனர். (ஒ)

## கஷ்டப் பிரதேச அதிபர்,ஆசிரியருக்கு விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவு

அச்சுவேலி,ஜன.14

யாழ்.குடாநாட்டில் கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாட சாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர் களுக்கு விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வுள்ளன.

யாழ்.குடாநாட்டில் தீவகம், வடமராட்சி கிழக்கு, மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்கள் போன்றவை கஷ்டப் பிர தேசங்களாகவும், அதிகஷ்டப் பிரதேசங்களாகவும் கல்வி அமைச்சால் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்குடனேயே அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இந்த விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

வருடாந்த சம்பள உயர்வுகள் மூலம் இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. கஷ்டப் பிரதேசத்தில் கடமை புரிபவர்களிலும் பார்க்க இரட்டித்த மடங்கு ஊக்குவிப்பு, அதிகஷ்டப் பிரதேசத்தில் கடமைபுரிபவர்களுக்கு வழங்கப்பட வுள்ளன.

யாழ்.குடாநாட்டில் 50இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் கஷ் டப் பிரதேசம், அதிகஷ்டப் பிரதேசம் ஆகியவற்றில் அமைந் திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-11)

## குடும்பத் தலைவியருக்கான கோழி வளர்ப்புத் திட்டம்

சண்டிலிப்பாய்,ஜன.14

பட்டினிக்கு எதிரான நிறுவனம் யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளில் பெண்களைக் குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான கோழி வளர்ப்பு அபிவிருத்தித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த நடவ டிக்கை மேற்கொண்டு வருகின்றது.

சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை, நல்லூர், சாவ கச்சேரி ஆகிய ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளிலுமிருந்து இதற்கென பெண்களை குடும்பத் தலைவராகக் கொண்ட 50 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக அவற்றில் 20 குடும்பங்களுக்கு இக்கோழி வளர்ப்பு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கோழிக் குஞ்சுகளும், அவற்றை வளர்ப்பதற்கான பொருள் உதவிகளும் விரை வில் வழங்கப்படவுள்ளன. அவ்வப் பிரிவிலுள்ள கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் கால்நடை வைத்திய அதிகாரிகள் இந்த கோழி வளர்ப்பு அபிவிருத்தி திட்டத்திலுள்ள கோழிகளுக் கான நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சைகளை வழங்குவர் என் றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-135)

**நாளை**

தை 01
புதன்கிழமை
(15.01.2001)
திதி : துவாதசி
பிற்பகல் 4.01வரை.
நட்சத்திரம் : ரோகிணி
பிற்பகல் 1.07வரை.
தைப் பொங்கல் திருநாள்
சுபநேரம் : 5.04 - 6.34
ராகுகாலம் : 12.34 - 2.04
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

ஒருவர் அடிக்கடி எதனை வெறுப்பதாகக் கூறுகி றாரோ அதனை அவர் அதிக மாக நேசிப்பதாக அர்த்தம்.

## விரிவாக்க அலுவலருக்கான பயிற்சியை பூர்த்தி செய்தோர் நியமனத்துக்குக் காத்திருப்பு

அச்சுவேலி,ஜன.14

யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்டு கால் நடை விரிவாக்க உத்தியோகத்தர்களாகப் பயிற்சி அளிக் கப்பட்ட பத்துப்பேர் நியமனத்தை எதிர்பார்த்து நீண்டகாலமாக காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் நிலவும் கால்நடை விரிவாக்க உத்தி யோகத்தர் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்ட 10 பயிற்சியாளர்களுக்கு வெலிசறை பயிற்சி நிலையத்தில் இரண்டு வருடங்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சி முடிவடைந்த பின்னர் நேர்முகப் பரீட்சை நடத்தப் பட்டு கால்நடை விரிவாக்க உத்தியோகத்தர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. பின்னரும் அவர்க ளுக்கான நியமனக் கடிதங்களை வழங்குவதில் இழுத்தடிக் கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் 38 கால்நடை விரிவாக்க உத்தியோகத் தர்கள் கடமைபுரியவேண்டும். தற்பொழுது கடமை புரிபவர்கள் 15பேர். ஆகவே, 23பதவி வெற்றிடங்கள் காலியாக உள்ள போதிலும் அவற்றை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது. (ஒ-11)

## காணாமற் போனோர் குறித்த விசாரணை 24ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.14

வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணா மற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வ தற்கென, மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நியமிக்கப் பட்ட விசேட குழுவின் விசாரணைகள் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் இடம்பெறவுள்ளன.

முன்னாள் யாழ்.அரச அதிபர் தேவநேசன் நேசையா தலை மையிலான இக்குழுவின் விசாரணைகள் எதிர்வரும் 24,25,26 ஆம் திகதிகளில் இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் பாதுகாவலர் சங்கச் செயலாளரைச் சந்தித்த மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர், இவ் விசாரணை களுக்கான பூரண ஒத்துழைப்பை சங்கம் வழங்கவேண்டுமெனக் கோரியிருந்தார்.

பாதுகாவலர் சங்கச் செயலாளருக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவருக்குமிடையில் ஏற்பட்ட இணக்கப் பாட்டையடுத்து பாதுகாவலர் சங்கம் பூரண ஒத்துழைப்பினை விசாரணைகளின் போது வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, விசாரணை நாள்களில் தினமும் பாதுகாவலர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் பிரசன்னமாக இருப்பார் என்றும் தூரப் பிரதேசங்களிலிருந்து விசாரணைகளுக்குச் சமுகமளிப் போர் போக்குவரத்துச் செலவைக் கோருமிடத்து அது வழங்கப் படும் என்றும் -

இச்சந்திப்புத் தொடர்பான முழு விவரமும் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறும் கூட்டத்தில் விளக்கப்படும் என்றும் - படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் சங கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-9)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய Mini-Digital Video Camera (போட்டோ எடுக்கக்கூடியது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.T.சுதர்சன், பழைய தபால் கந்தோர் ஒழுங்கை, தலையாழி, கொக்குவில். T.P.: 0777 190774 (13147)

வீடு அமைக்கக்கூடிய நல்ல காட்டுத்தடிகள், மரங்கள் மற்றும் நல்ல ஆட்டுக்கல்லு, அம்மி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: த.தர்மச்சந்திரன், மே/பா அ.இலக்ஸ்மன், அரசகேசரி பிள்ளையார் கோயிலடி, நீர்வேலி வடக்கு. (13154)

அளவெட்டி வடக்கு, கொட்டுஞ்சீமா வைரவர் கோயிலடி (யூனியனுக்குப் பின்புறம்) நல்ல சுற்றாடலில் வீடு கட்டக்கூடிய 4 பரப்புக் காணியும் கணேஸ்வரத்தில் வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் 7 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: த.தர்மச்சந்திரன், மே/பா அ.இலக்ஸ்மன், நீர்வேலி வடக்கு (13155)

## வீடு விற்பனைக்கு

ரெம்பிள் றோட் - றக்கா றோட் சந்தியில் அமைந்துள்ள (11/4 பரப்பு) மேல்மாடி வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.மகேந்திரன், 10/1, றக்கா றோட், யாழ்ப்பாணம். (13148)

## தேவை

சிறிய குடும்பத்திற்கு 45 வயதிற்கு மேற்பட்ட பெண் உதவியாளர் தேவை. வீட்டில் தங்கியிருந்து பொறுப்பாக சகல வேலைகளையும் கவனிக்கக் கூடியவராக இருத்தல் விரும்பத்தக்கது. நேரில் தொடர்புகொள்ளவும் இல. 29/1, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (13151)

சிறுபிள்ளை ஒருவரை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் 2000/- விவரங்களுடன் தபாலில் அல்லது நேரில் தொடர்புகொள்ளவும். ச.சுதாகரன், 203, கோவில் வீதி, நல்லூர். (13181)

## மணமகள் தேவை

றோமன் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர் (வயது 38) ஒருவருக்கு மணமகள் தேவை. ஆசிரியை விரும்பத்தக்கது. தொடர்பு: திருமதி எல்.அந்தோனிப்பிள்ளை, 'றாஜகிரி' 2ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை. (13189)

## திருமண சேவை

1969, விசாகம், செவ்வாய் 8, கிரகபாவம் 26, கொழும்பு உயர் உத்தியோக மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. விருப்புக்கேற்ப மணமக்கள் தேர்வுக்கு நாடுங்கள்: துரை விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (13174)

## தவறிவிட்டது

11-01-2003 சனி இரவு மானிப்பாய், செல்லமுத்து வீதியில் 'சீக்கோ' கைக்கடிகாரம் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'சுந்தர்சன்' செல்லமுத்து வீதி, மானிப்பாயில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (13158)

## நாடக நூல்கள்

வானொலியில் 'அடி பதிலடி' நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய கலாபூசணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நாடக நூல்கள் 1.நாடகம் எழுதுவது எப்படி? 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? 3.எங்கள் நாடு 4.இலக்கிய விமர்சனம். (13188)

## பண்டத்தரிப்பில் கட்டாக்காலி நாய்கள் தொல்லை

சண்டிலிப்பாய்,ஜன.14

பண்டத்தரிப்பு சந்தைப் பகுதியிலும், அதன் சுற்றாடலிலும் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. இந்த கட்டாக்காலி நாய்கள் வீடுகளில் வளர்க்கப்படும் கோழிகளைப் பிடித்து வருவதாகவும தெரிவிக்கப்பட்டது.

இக்கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் இப்பகுதி மக்கள் முறையிட்டுள்ளனர். (ஒ-135)

---

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 02 - 04 - 1975



விண்ணில் 01 - 01 - 1996

## பஞ்சாட்சரம் கபிலன (அப்பன்)

(நெல்லியடி மத்திய மகா வித்தியாசாலை; பழைய மாணவுன்)

(திதி - 14-01-2003)

*காலத்தின் தேவையறிந்து*
*கல்விதனை முடித்துவிட்டு*
*களமாடச் சென்றவனே*
*கபிலனே மாவீரனே!*
*எங்கள் கண்களில்*
*எப்படியும் தெரிவாயென்று*
*எத்தனை வருடமாய்*
*ஏங்கியே இருந்தோம்!*
*அத்தனை கண்களிலும்*
*கண்ணீராய் மலர்ந்தாயோ?*
*ஆண்டுகள் ஏழல்ல*
*ஆயிரம் சென்றாலும்*
*உன் நினைவு மாறாது!*

*'ஸ்ரீரங்கம்'*
*நக்கீரன் வீதி,*
*அல்வாய் வடக்கு.* (13183)

பிரிவால் துயருறும்:
கோ.பஞ்சாட்சரம் குடும்பத்தினர்

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 24 - 08 - 1928



உதிர்வு 15 - 12 - 2002

## செல்வி
## நீலோசனி முத்தையா

இன்று (14.01.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்புச் சகோதரியின் ஆத்மசாந்திப் பூஜ்சையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும அன்புடன் அழைக்கின்றோம்.

சகோதரர்கள் குடும்பத்தினர்.

*59,ஆனந்தன் வடலி வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.* (13180)

---

# நீங்காத நினைவில்
# மூன்றாம் ஆண்டு அஞ்சலி

மலர்வு 01 - 09 - 1974



உதிர்வு 14 - 01 - 2000

## முதலி பகீரதன்

(முன்னாள் ஊழியர், பருத்தித்துறை நகராட்சி மன்றம்)

*உதிக்கின்ற சூரியன் தன் கதிர்களாலே*
*ஒளிர்தளிர்கள் தாமரையில் விரிதல் போல*
*மதிப்புரையால் மலர்முகத்தால் வார்த்தை தன்னால்*
*மனக்கவலை மறக்க வைப்பீர் எந்நாளும்*
*மதிப்புயர்ந்த மாணிக்கம் கடலின் மத்தி*
*வழுக்கிவிட கைநெகிழ்ந்தார் போல நின்றே*
*அதிப்பெரிய துன்பத்தால் மனமுடைந்து*
*மழையற்ற வான் பயிர் போல் வாடுகின்றோமே!*

*புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.* (13191)

- குடும்பத்தினர்.

---


சிவமயம்

அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

# ஜோதிடம்

இந்திய பரம்பரை சாஸ்திரியார்

## அருள்வாக்கு அம்பிகா அம்மா

அவர்கள் முதல்முறையாக யாழ்.மாநகருக்கு வருகைதந்துள்ளார்கள். கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும். ஜாதகம் எழுதிக்கொடுக்கப்படும். மற்றும் எந்தப்பிரச்சினைகள் ஆனாலும் ஜோதிட ரீதியாகச் சரிசெய்யப்படும்.

தொடர்புகளுக்கு:

அருள்வாக்கு அம்பிகா அம்மா
மடோனா லொட்ஜ்
(லிங்கன் கிறீம் ஹவுஸ், ஸ்ரீமுருகன் ஜுவலர்ஸ் அருகில்)
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை பார்க்கப்படும். (13176)


---

# யா/கோப்பாய் மகா வித்தியாலயம்

புதிதாக புனரமைக்கப்பட்ட

## அமரர் சு.வைத்திலிங்கம்

ஞாபகார்த்த

## நூல் நிலையத் திறப்பு விழா - 2003

*காலம் :* இன்று(14.01.2003) செவ்வாய்க்கிழமை மு.ப.10.30 மணி

*இடம் :* பாடசாலையின் பிரதான மண்டபம்

*தலைவர்:* திரு.அ.அகிலதாஸ் அவர்கள (அதிபர்)

*முதன்மைவிருந்தினர்:*

- ★ திரு.சு.ஸ்கந்ததேவா (Access Director F/S Ltd, London)

*சிறப்பு விருந்தினர்கள்:*

- ★ திரு.இ.சிவஞானசுந்தரம அவர்கள் (உதவிக் கல்விப் பணிப்பாளர் கோப்பாய்க் கோட்டம்)
- ★ வைத்திய கலாநிதி திரு.வை.தியாகராசா அவர்கள்
- ★ திரு.இ.விஜயகுமார் அவர்கள் (Nature Lanka Tours)

*ஆசியுரை:*

- ★ ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் — 2ஆவது குருமகா சந்நிதானம் - நல்லை ஆதீனம்
- ★ அருட்தந்தை கி.யோ.ஜெயக்குமார் — கியூடெக் பணிப்பாளர்

*வாழ்த்துரை:*

- ★ செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் — ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
- ★ திருமதி மீரா அருள்நேசன் — உதவிக் கல்விப் பணிப்பாளர் யாழ். வலயம்
- ★ திரு.ஆ.சி.நடராஜா (பிரதம ஆசிரியர் - தினக்குரல்)

★ விருந்தினர்கள் உரை

★ நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(C/26039)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

---

# 31ஆவது நாள் நினைவஞ்சலி

மண்ணில் 08 - 01 - 1947



விண்ணில் 15 - 12 - 2002

## அமரர் கனகசபை கருணானந்தன்

*ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு 'அப்பா' என அழைக்க*
*நீங்கள் இல்லையே அப்பா! உங்கள் உடல் எம்மை*
*விட்டுச் சென்றாலும் உயிர் எங்களை விட்டு அகலாது!*

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் நினைவுடன்:
அன்பு மனைவி,
பிள்ளைகள், சகோதரர்கள்.

*கணேஸ்வரம்,*
*அளவெட்டி.* (13182)

# 55 நாள்களுக்கும் மேலாகத் தொடரும் நெடுந்தீவு மக்கள் போராட்டம் குறித்து அரசு கண்மூடி நிற்பது கவலை தருகிறது!

## பொது அமைப்புகளின் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.14

கடந்த 55 நாள்களுக்கும் மேலாக நெடுந்தீவு மக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால், அரசு இதனைக் கண்டும் காணாததுபோல் கண் மூடி நிற்பது கவலைதருகிறது.

- இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம்.

ஈ.பி.டி.பியினரை நெடுந்தீவிலிருந்து வெளியேறக்கோரி போராடிவரும் நெடுந்தீவு மக்கள் தொடர்பாக ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த வேதனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நெடுந்தீவை விட்டு ஈ.பி.டி.பி. உறுப்பினர்களை வெளியேறக்கோரி கடந்த 55 நாள்களுக்கும் மேலாக - தங்கள் நியாயமான, நிம்மதியான வாழ்வுக்காக - ஜனநாயக வழியில் அறப் போராட்டத்தை மேற்கொண்டு வரும் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்படவில்லை. மாறாக, ஸ்ரீலங்கா கடற் படையினதும், பொலீஸாரினதும் துணையுடன் ஈ.பி.டி.பி.உறுப்பினர்கள் புரிந்துவரும் அத்துமீறல்களும் அடாவடித்தனங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இந்நிலை குறித்து நிம்மதியையும், அமைதியையும், மனித நேயத்தையும், இயல்பு வாழ்க்கையையும் நேசிக்கின்ற மக்கள் அச்சம் கொள்ளாமல் இருக்க முடியாது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டாவது ஆண்டை வரவேற்கக் காத்திருக்கும் இவ்வேளையில், சமாதானப் பேச்சுக்கள் நான்காவது சுற்றைக் கடந்துள்ளன. இந் நிலையில் நல்ல வல்ல முடிவுகள் கனிந்துவருமெனக் காத்திருக்கும் புறநிலைச் சூழல்களில் நெடுந்தீவு மக்கள் மட்டும் அதை அனுபவிக்க முடியாது அவலப்படுவதை எவரும் ஏற்றுக்கொள்ளவோ அல்லது அனுமதிக்கவோ முடியாது.

நெடுந்தீவு மக்களின் அவல நிலையையும், அடிமை வாழ்வையும் கண்டும் இதுவரை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும், சர்வதேச அமைப்புக்களும், மனிதநேய சக்திகளும், ஏன் இலங்கை அரசும் கூட கண்மூடி மௌனிகளாக இருப்பது எமக்கு மிகுந்த வேதனையளிக்கிறது. மாறாக, சமாதானத்தின்பால் எமக்கு இருந்த நம்பிக்கையும் இடிந்து வருகிறது.

சமாதானத்தின் புறநிலைகள் சாதகமாகிக் கனிந்துவருகின்ற இன்றைய நிலையில், அதை பாதகமாக்காது எமது உடன்பிறப்புக்களான நெடுந்தீவு மக்களின் நீதியான, உண்மையான கோரிக்கைக்கு மதிப்பளித்து அவர்களின் இயல்பு வாழ்க்கை நிலையை உறுதியுடன் உருவாக்க பொருத்தமான நடவடிக்கைகளை இன்னும் தாமதியாது விரைந்து செயல்படுத்தி சமாதானத்தின்பால் மக்கள் கொண்ட நம்பிக்கையையும் வலுப்படுத்த வேண்டும்.

நெடுந்தீவில் இருந்து ஈ.பி.டி.பி. உறுப்பினர்களை வெளியேறக்கோரி அம்மக்கள் மேற்கொண்டுவரும் அறப போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர சர்வதேச அமைப்புகள் மற்றும் சமய - சமூக அமைப்புக்கள் நெடுந்தீவு மக்களின் போராட்ட உணர்வுக்கும் நியாயத் தன்மைக்கும் மதிப்பளித்து, மக்கள் நலன்சார் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுக்கிறது - என்றுள்ளது.

# பொலீஸார் உங்களது சகோதரர்கள் ஆகவே அவர்களுடன் ஒத்துழையுங்கள்!

## மக்களுக்கு பொலீஸ் அத்தியட்சகர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.14

நாங்கள் உங்கள் உடன்பிறவாச் சகோதரங்கள். எங்களுடன் ஒத்துழைத்து வீதி ஒழுங்கைப் பேண உதவுங்கள்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்தார் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் கமால்தீன்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாகனச் சாரதிகளுக்கான செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பொலீஸாரைக்கண்டு மக்கள் அஞ்சத் தேவையில்லை. தவறுசெய்தவர்களைச் சட்டத்தின்முன் நிறுத்துவதே பொலீஸாரின் கடமை.

நாம் உங்களது உடன்பிறவாச் சகோதரர்கள். உங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எம்மிடம் தெரிவித்து நியாயம் பெறமுடியும். மோட்டார் சைக்கிளில் பயணிப்போருக்கு விபத்தின்போது தலைக்கவசம் உயிரைப்பாதுகாக்கும். அதனாலேயே அதனைக கட்டாயமாக்கி வருகிறோம். வாகனச்சாரதிகள் அனுமதிப்பத்திரம் பெற்றிருப்பது அவர்களது அனுபவத்திற்கும் ஆற்றலுக்கும் உதவி புரியும். அதன்மூலம் விபத்துக்கள் நடைபெறுவதையும் தடுக்கமுடியும்.

வாகனங்களை அதிவேகமாக ஓட்டக்கூடாது. அதனால் உயிரிழப்புக்கள் மட்டுமன்றி மக்களின் பொல்லாப்புகளையும் சாரதிகள் எதிர்கொள்ள நேரிடும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள மிகவும் பாதிக்கப்பட்டவர்கள். அவர்கள் வீதி விபத்துக்களால் மேலும் பாதிப்படையக்கூடாது. சாரதிகள் அவதானமாக நடந்துகொள்வது எல்லோருக்கும் நன்மை தரும் என்றார். (ஒ-12)

# தேசிய கீதத்தை 'சிடி'யில் வெளியிட அது என்ன 'பைலா' தாளப் பாடலா?

## சிஹல உறுமய தலைவர் அமைச்சருக்குக் கடிதம்

கொழும்பு,ஜன.14

எமது தேசிய கீதம், நாட்டின் தேசிய உடைமையாகும். இதை ஒருவரோ, அல்லது குழுவினரோ பாடி இசைத்தட்டாக வெளியிட அனுமதிக்கக்கூடாது. நாட்டு மக்கள் அனைவரும் போற்றி, மதிக்கும் தேசிய கீதத்தின் மகிமையைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

எமது வேண்டுகோளை அசட்டை செய்து அமைச்சர் மௌனம் சாதிக்கக்கூடாது.

மனிதவள, கல்வி, கலாசார அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில், சிஹல உறுமயத் தலைவர் திலக் கருணாரத்ன இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியிருப்பதாவது:-

இலங்கையின் தேசிய கீதம் பிரபல இசையமைப்பாளர் ரோஹண வீரசிங்கவின் இசையமைப்பில், பிரபல பாடகர்களான டபிள்யூ.டீ.அமரதேவ, நந்தா மாலினி ஆகியோர் பாடி இசைத் தட்டாக வெளிவரவுள்ளதாக அறிகிறோம்.

தேசிய கீதத்தை வர்த்தகப் பொருளாக்குவதை எவரும் ஏற்கப்போவதில்லை. காலப்போக்கில் தேசிய கீதம் 'பைலா' தாளத்திலும் பாடும் பாடலாகும் அபாயம் தோன்றிவிடும்.

இந்தியாவில் தேசிய கீதத்தை பிரபல பாடகர்களான மொஹமட் ராபீ, லதா மங்கேஷ்கர் முதலானவர்களைக் கொண்டு இசைத்தட்டாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், இந்திய அரசு அதனை அனுமதிக்கவில்லை. இதனை நீங்களும் அறிந்திருப்பீர்கள்.

இலங்கையின் அரசமைப்பின் ஏழாவது உறுப்புரைக்கமைய அரச நியமனம் பெற்ற புத்திஜீவிகளினால தெரிவுசெய்யப்பட்டதே எமது தேசிய கீதமாகும்.

தேசிய கீதத்தின் மகிமையைக் கெடுக்கும் நடவடிக்கையை எவர் மேற்கொண்டாலும் பொதுமக்களோடு இணைந்து ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்வோம்.

- இவ்வாறு அவர் கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ஓ)

# தொண்டமனாறு விபத்தில் சிக்கிய மீனவர்களுக்கு உதவி வழங்குக!

## சமாசத் தலைவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜன.14

தொண்டமனாறுக் கடலில் மீனவர் படகு மீது கடற்படையினரின் ரோந்துப் படகு மோதிய சம்பவத்தில் பாதிப்புக்குள்ளான மீனவர்களுக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக மனிதாபிமான உதவிகளை வழங்கவேண்டும் என வடமாகாணக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த மாதம் 31ஆம் திகதி தொண்டமனாறுக் கடலில் மீன்பிடிக்கச் சென்றுகொண்டிருந்த மீனவர் படகு மீது கடற்படையினரின் ரோந்துப் படகு மோதியது. இதில் ஒருவர் உயிரிழந்ததுடன் இருவர் காயமடைந்தனர். படகும் சேதத்திற்குள்ளானது.

இந்தச் சம்பவத்தில் பாதிப்புக்குள்ளான மீனவர்களுக்கே சம்பந்தப்பட்டவர்கள் உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தற்செயலானது எனக் கூறி தட்டிக் கழித்துவிட முடியாது எனவும் -

இதுபோன்ற சம்பவங்கள் முன்னரும் இடம்பெற்றுள்ளன எனவும் -

தெரிவித்துள்ள வடமாகாணக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம், இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாதிருக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் கோரியுள்ளார்.

இச்சம்பவத்தைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-8)

### காரைநகர் - தெல்லிப்பழை இடையே

# பஸ்சேவையைத் தொடர பொதுமக்கள் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஜன.14

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலையால் நடத்தப்பட்டுவந்த காரைநகர்-தெல்லிப்பழை இடையேயான தடம் எண்-740 பஸ்சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த பஸ்சேவை காரைநகரில் இருந்து புறப்பட்டு சுழிபுரம், சித்தன் கேணி, பண்டத்தரிப்பு,தொட்டிலடி, மாகியப்பிட்டி, அளவெட்டி, மல்லாகம் ஆகிய இடங்களுக்கு ஊடாக தெல்லிப்பழை துர்க்காபுரம் வரை நடத்தப்பட்டுவந்தது. இந்த பஸ்சேவையை மீண்டும் ஆரம்பிக்கும்படி இப்பகுதி மக்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை முகாமையாளரை கடிதம் மூலம் கேட்டுள்ளனர்.

இதேவேளை -

காரைநகரில் இருந்து சித்தன் கேணி, சண்டிலிப்பாய், மருதனார் மடம் ஆகிய இடங்களின் ஊடாக நடத்தப்பட்ட 782/2 இலக்க பஸ்சேவையும் இம்மாதத்திலிருந்து நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-135)

## நாடகப் பயிலகம்

கொழும்புத்துறை,ஜன.14

யாழ்.திருமறைக் கலாமன்றம் நடத்தும் வருடாந்த நாடகப் பயிலகத்திற்கு ஆர்வமுள்ளவர்கள் பயிற்சியாளர்களாக சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இதில் இணைந்து பயன்பெற விரும்பும் ஆர்வலர்கள், எதிர்வரும் 2ஆம் திகதிக்கு முன்பாக தமது பெயர்களை பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-30)

## அரச ஊழியருக்கான சம்பளத் திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.14

அரச ஊழியர்களுக்கு இந்த ஆண்டில் சம்பளம் வழங்கப்படும் திகதிகள் பற்றி பொதுநிர்வாக அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பளம் வழங்கப்படவுள்ள திகதிகள் மாதாந்த ரீதியாக வருமாறு:-

ஜனவரி - 24, பெப்ரவரி - 25, மார்ச் - 25, ஏப்ரல் - 10, மே - 23, ஜூன் - 25, ஜூலை - 25, ஓகஸ்ட் - 22, செப்ரெம்பர் - 25, ஒக்டோபர் - 23, நவம்பர் - 25, டிசெம்பர் -24 (ஒ-10)



அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த பெருந்தோட்ட கைத்தொழில்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, தென்னை அபிவிருத்திச் சபைத் தலைவர் லிங்கோ பெனாண்டோ ஆகியோரும் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும் அச்சுவேலியில் உள்ள தென்னை நாற்று மேடையினை திறந்து வைப்பதற்காக வந்திருந்த போது எடுக்கப்பட்ட படம்.

யாழ்.மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.சத்தியேந்திரன் இவர்களை வரவேற்று மாலை அணிவிப்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: வலிகிழக்கு செய்தியாளர்)*

## மருத்துவர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜன.14

காரைநகர் வைத்தியசாலைக்கு நீண்டகால இடைவெளியின் பின்னர் எம்.பி.பி.எஸ்.பட்டம்பெற்ற மருத்துவர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் ஆர்.எம்.பி. மருத்துவர் ஒருவரே இங்கு கடமை புரிந்து வந்தார். தற்போது வைத்திய அதிகாரியாக டாக்டர் திருமதி எஸ். கனகசபை நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ஒ-139)

## பாலர் பாடசாலையின் பரிதாப நிலை

கைதடி,ஜன.14

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் அறவழிப் பாலர் பாடசாலையின் கட்டடம் கடந்த கால யுத்தம் காரணமாக முற்றாகச் சேதமடைந்ததினால் தற்போது தனியார் ஒருவரின் வீட்டிலேயே அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருகின்றது. இதனால் அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் பல சிரமங்களை அனுபவிப்பதாகக் கூறப்படுகின்றது. (ஒ-75)

## வவுனியாவில் ஓடு பிரித்து திருட்டு!

கைதடி,ஜன.14

கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் சென்றவேளை ஓடு பிரித்து வீட்டினுள் இறங்கிய திருடர்கள், அங்கிருந்த நகைகள், பணம் என்பவற்றை அபகரித்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை வவுனியாவில் உள்ள பண்டாரிக்குளம் எனும் இடத்தில் இடம்பெற்றது.

ஆசிரியர்களாகக் கடமைபுரியும் இவர்கள், அன்றைய தினம் வீட்டைப் பூட்டிய பின்னர் காலை 8.30 மணியளவில் கடமைக்குச் சென்றதாகவும் -

பிற்பகல் வேளை திரும்பிவந்து வீட்டைத் திறந்தபோது ஓடு பிரித்து திருடப்பட்ட சம்பவம் தெரியவந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-75)

## பாடசாலை பைகள் அன்பளிப்பு

அச்சுவேலி,ஜன.14

தரம் I வகுப்பில் புதிதாக அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கு ஐ.நா.சிறுவர் நிதியம் (யுனிசெவ்) கற்றல் உபகரணங்கள் அடங்கிய பாடசாலைப் பைகளை அன்பளிப்பாக வழங்கிவருகிறது.

அன்பளிப்பாக வழங்கப்படும் பாடசாலைப் பையில் 'கொதித்து ஆறிய நீரை அருந்துவோம்' என்ற வாசகம் அச்சிடப்பட்ட குடிதண்ணீர் போத்தல் -

'கைகழுவிய பின்பு உணவு உண்போம்' என்ற வாசகம் அச்சிடப்பட்ட சாப்பாட்டுப் பெட்டி, அறிவுறுத்தல்கள் பொறிக்கப்பட்ட 6 பயிற்சிப் புத்தகங்கள், 5பென்சில்கள், அடிமட்டம், பழங்களின் வடிவம் கொண்ட அழி இறப்பர் என்பனவும் -

சிறுவர்களின் உரிமைகள் பேணப்பட வேண்டிய அவசியம் பற்றி பெற்றோர்க்கு அறிவுறுத்தும் கடிதமும் அதற்குரிய விசேட உறையில் இடப்பட்டு தனித்தனியாக வைக்கப்பட்டுள்ளன. (ஒ-11)

மிக நுட்பமானதும் திறமையான
செயற்படும் கொண்ட
இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்

மிகச் சிறந்த தரம்மிக்க, புதிய
மற்றும் மறுசீரமைக்கப்பட்ட
இயந்திரங்கள் நம்ப
முடியாத விலையில்



- Lathe machines
- Injection moulding machines
- Shapers & surface grinders
- Sheet bending & cutting machines
- Vertical & horizontal milling machines
- Drilling machines



இலங்கையில் மிகப்பெரிய கையிருப்பைக் கொண்ட நிறுவனம்
**Bhathiya Trading Company**
PRIVATE LIMITED
Office 7, Katukurunduwatta Road, Ratmalana, Sri Lanka.
Tel: 622402,622403,729820. Fax:94-1-713625, 074-210781
Factory 7D, Postmasters Place, Mt. Lavinia, Sri Lanka. Tel: 729798
E. mail bhathiya@itmin.com


## திருமறைக் கலாமன்ற பொங்கல் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.14

திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் கலைப்பொழுது நிகழ்வுகள் பொங்கல் தினமான நாளை புதன்கிழமை திருமறைக் கலாமன்ற கலைத்தூது மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இதில் காலை 5.30 மணிக்கு பொங்கல் நிகழ்வுகளும் 7.30 மணிக்கு பண்பாட்டு வழிபாடும் அதனைத் தொடர்ந்து விசேட கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்ற இயக்குநர் கேட்டுள்ளார்.

(ஒ-5)

## பாடசாலை நூலக திறப்பு விழா

வலி.கிழக்கு,ஜன.14

கோப்பாய் மகா வித்தியாலயத்தில் புதிதாகப் புனரமைக்கப்பட்ட சு. வைத்திலிங்கம் ஞாபகார்த்த நூல் நிலையத் திறப்புவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக லண்டனில் உள்ள அக்சைஸஸ் நிறுவன பணிப்பாளர் சு. ஸ்கந்ததேவாவும் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரமும் வைத்திய கலாநிதி வை.தியாகராசாவும், இ.விஜயகுமாரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்விற்கு ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகளும், கியூடெக் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்தந்தை யோ. ஜெயக்குமாரும் வழங்குவர். வாழ்த்துரையினை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும் திருமதி மீரா அன்புநேசனும் வழங்குவர்.

(ஒ-180)


நீண்ட கால அச்சுப்பதிப்பிற்கு
நுட்பமானதும் உற்பத்தித்திறன்
கூடியதுமான இயந்திரங்கள்

Machines and accessories avilable

- Heidelberg(KORD/SORD/SORDZ)
- RYOBI/HAMADA/DAVIDSON
- Paper cutters
- Wire stitchers
- Plate Makers
- Laminating machines
- Corrugated box making machines

அனைத்து வகையான
புதிய மற்றும்
மறுசீரமைக்கப்பட்ட
அச்சு இயந்திரங்கள்
மற்றும்
உதிரிப்பாகங்கள்



Products for the press room

- Printing Plates
- Press room chemicals
- Printing inks
- Blankets/Jackets



இலங்கையில் மிகப்பெரிய கையிருப்பைக் கொண்ட நிறுவனம்


**Bhathiya Trading Company**
PRIVATE LIMITED
Office 7, Katukurunduwatta Road, Ratmalana, Sri Lanka.
Tel: 622402,622403,729820. Fax:94-1-713625, 074-210781
Factory 7D, Postmasters Place, Mt. Lavinia, Sri Lanka. Tel: 729798
E. mail bhathiya@itmin.com



## இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடா நிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப் பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

**மணிசாமி P.T.R.**

யாழ்.உல்லாசப் பயணிகள் விடுதி.
இல.54, மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).
பார்வையிடும் நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 4.00மணிவரை
(வியாழக்கிழமைகளில் விடுமுறை)

(13190)



## தேவை

கேபிள் தொலைபேசி லைன் ஒன்று தேவை.

தொடர்பு: யசோ
பலாலி வீதி. பரமேஸ்வராச் சந்தி.
T.P: 0777 734339

(13197)


## 2ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தாயின் மடியில் 03 - 02 - 1945

காலன் பிடியில் 14 - 01 - 2001

### அமரர் சுப்பு தங்கராசா

(31 ஸ்ரீ ... கார் உரிமையாளர்)

*வாழுறையும் அப்பாவே!*
*வானுயர சென்றிடினும் வையகத்தில் நாம் மறவோம்!*
*உங்கள் நினைவுகளை எம் கண்ணீர் துளிகள் மீட்டும்.*

எம் அன்புத் தெய்வத்தின் 2ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று (14.01.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றது. அதில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தாவடி தெற்கு,
பத்திரகாளி கோயிலடி,
கொக்குவில்.

(13193)

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், பெறாமக்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் அதிபர் திரு.ந.அரியரட்ணம்
அவர்களின் பாசமிகு தாயாரும்,
எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி சாந்தாராணி அரியரட்ணம்
அவர்களின் அன்பு மாமியாருமாகிய

### திருமதி வள்ளியம்மாள் நடராஜா

அவர்களின் மறைவிற்கு கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பிப்பதுடன் துயருற்றிருக்கும் அவர்களின் குடும்பத்தினருடன் துயர் பகிர்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/சிதம்பராக்கல்லூரி, வல்வெட்டித்துறை

(சி-26042)


## கணிதம்

தரம் 6 முதல் O/L வரையான வகுப்புகளும் 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கான வகுப்புகளும் 15.01.2003இல் நேரம் 4 ப.ப. ஆரம்பமாகவுள்ளன.

தொடர்பு: ஆசிரியர்
125, Chapel St.Jaffna
252, Jaffna Rd., Manipay.

பிரத்தியேக வகுப்புகள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும்.


## நீங்கா நினைவில் ஏழாண்டு



அன்னை மடியில் 12 - 02 - 1968

சுவர்க்க வாழ்வில் 01 - 01 - 1996

### துணைபாலசிங்கம் கிருபாகர் (G.K.)

(விவசாயப் பொருளியல் இறுதியாண்டு மாணவன்,
யாழ். பல்கலைக்கழகம் - விவசாயபீடம்)

திதி: சுவர்க்கவாயில் ஏகாதசி 14.01.2003

உமது ஆத்மாவிற்கு,

*எமது ஆத்ம உணர்வுகள், என்றென்றும்*
*அன்புடன் - உறுதுணையாக, எத்தனை*
*சூழ்ச்சிவரினும் தொடரும்.....*

அண்ணா,
கு. சாந்தமோகன் (கிராம அலுவலர்),
கொக்குவில்.

(13185)

அம்மா, அக்கா,
அண்ணா, அண்ணி.

## மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பயிற்சித் திட்டம்

எமது நிறுவனம் மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பாடசாலையொன்றைக் கொழும்பில் கடந்த 8 வருடங்களாகச் சிறப்பாக நடத்திவருகிறது. இங்கு கல்வி புகட்டும் ஆசிரியர்கள் யாவரும் வெளிநாட்டில் மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான கல்வியில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற கல்விமான்களால் பயிற்றப்பட்டவர்கள். மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளும் சமுதாயத்தில் சுயமரியாதையுடன் சமமாக வாழ வழி வகுப்பதே எமது அமைப்பின் நோக்கமாகும்.

நாம் எமது சேவையை வட கிழக்கிலுள்ள மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்கும் வழங்க உத்தேசித்துள்ளோம். இதன் முதற்கட்டமாக இவர்களின் விவரங்களைத் திரட்டி, அவர்களின் பெற்றோருக்கு ஒரு சிறப்புப் பயிற்சிப்பட்டறை நடத்தத் தீர்மானித்துள்ளோம். இதன் இரண்டாம் கட்டமாக பிள்ளைகளின் பெற்றோரின் ஆதரவுடன் பயிற்றப்பட்ட ஆசிரியர்களைக் கொண்ட பாடசாலையையும் நிறுவத் திட்டமிட்டுள்ளோம்.

ஆகவே, பெற்றோர்களே! உங்களின் மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் (வயதெல்லை கிடையாது) விவரங்களை கீழ்வரும் முகவரிக்கு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதிக்கு முன் எமக்குக் கிடைக்குமாறு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

திட்டப் பணிப்பாளர்,
Millennium Institute For Children With Special Needs,
(அரசாங்க அங்கீகாரம் பெற்ற லாபம் கட்டாத சமூக நல அமைப்பு)
புரமோட்டர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டட்,
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(C/25997)

# வைஷ்ணவம் சார்ந்த விரதங்களில் மேன்மையானது வைகுண்ட ஏகாதசி

**வைகுண்ட ஏகாதசிதினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

மார்கழி மாதத்தில் சைவ, வைஷ்ணவ இரு பெருவிழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. அவை சிவனுக்குரிய ஆருத்ரா தரிசனம், விஷ்ணுக்குரிய சொர்க்க வாயில் தரிசனம். அதேபோல, சைவம் சார்ந்த விரதங்களுள் மேன்மையானது சிவராத்திரி விரதம் என்றும் வைஷ்ணவம் சார்ந்த விரதங்களுள் வைகுண்ட ஏகாதசி மேன்மையானது என்றும் கூறப்படுகின்றது.

'மாதங்களில் நான் மார்கழி' என பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறினார். மார்கழி மாத வளர்பிறையில் பதினொராம் நாள் வைகுண்ட ஏகாதசி விரதம் கொண்டாடப்படுகின்றது. இதனை சுவர்க்கவாயில் ஏகாதசி, மோட்ச ஏகாதசி, பெரிய ஏகாதசி எனவும் கூறுவர்.

கங்கையைவிட சிறந்த தீர்த்தமில்லை. விஷ்ணுவைவிட உயர்ந்த தேவரில்லை. தாயிற் சிறந்த கோயிலுமில்லை. காயத்திரியைவிட உயர்ந்த மந்திரமில்லை. அன்ன தானத்தைவிட சிறந்த தானமில்லை. ஏகாதசியைவிட சிறந்த விரதமில்லையென்று வைஷ்ணவ புராணங்



கள் பகர்கின்றன.

ஏகாதசி விரதத்தின் வரலாற்றை பவிஷ்யோத்தர புராணம், அக்கினி புராணம், ஸ்காந்த புராணம், பத்ம புராணம், நாராயண புராணம் மற்றும் கல்ப்ப சூத்திரங்கள் கூறி நிற்கின்றன. பன்னிரு மாதங்களிலும் வரும் ஏகாதசிகள் அவ்விரதத்தை அனுஷ்டித்துப் பயனடைந்தோர் காரணமாக அவர்களின் பெயர் கொண்டு விளங்குகின்றன. சுவர்க்கவாயில் ஏகாதசி நாள் தேவரும் அசுரரும் பாற் கடலினைக் கடைந்து அமிர்தம் எடுத்த தினமாகவும், அர்ச்சுனனுக்குக் கண்ணன் கீதை உபதேசம் செய்த நாளாகவும் கூறப்படுகின்றது. ஏகாதசி விரதம் பற்றிய வரலாற்றை பத்ம புராணம் பின்வருமாறு கூறுகின்றது.

கிருதயுகத்தில் முரன் என்னும் ஒரு கொடிய அசுரன் இருந்தான். அவன் தேவர்களையும் முனிவர்களையும் வருத்தினான். இவனின் கொடுமை தாங்காது தெய்வேந்திரன மஹாவிஷ்ணுவிடம் முறையிட்டான். தேவர்களைக் காக்கும் பொருட்டு விஷ்ணுவிற்கும் முரனுக்கும் பல ஆண்டுகள் போர் நடந்தது. எத்தெய்வத்தினாலும் தனக்கு மரணம் ஏற்படக்கூடாது என வரம் பெற்றிருந்ததாலே அவனை அழிக்க விஷ்ணுவால் முடியவில்லை. விஷ்ணு களைப் படைந்தவர்போல பத்ரிகாசிரமம் என்னும் இடத்தில் ஒரு குகையில் யோக நித்திரையில் ஆழ்ந்தார். முரன் அங்கும் சென்று விஷ்ணுவுடன் போர் தொடுத்தான். அப்போது விஷ்ணுவின் தேகத்திலிருந்து ஓர் அபூர்வ சக்தியானது பெண்ணுருவில் வெளிப்பட்டு முரனை அழித்தது. யோக நித்திரையிலிருந்து எழுந்த விஷ்ணு முரனை அழித்த சக்திக்கு ஏகாதசி எனப் பெயரிட்டு இத்தினத்தினிலே விரதமிருந்து வழிபடுபவருக்கு வைகுண்டப் பதவி அளிப்பேன் என வரமளித்தார்.

மார்கழி மாதத்தில் வரும் தேய்

**ஸ்ரீவத்ஸ**
**வ.இராஜேஸ்வரக்குருக்கள்**
*பிரதமகுரு.*
*ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.*

பிறை ஏகாதசியே முதலில் தோன்றியது. இதனை உற்பத்தி ஏகாதசி என்பர். ஆயினும், மார்கழி மாத வளர்பிறை ஏகாதசியான வைகுண்ட ஏகாதசியிலிருந்தே இவ்விரதம் கைக்கொள்ளப்படல் வேண்டும். கர்ப்பிணிகள, நோயாளர் தவிர்ந்த ஏனையோர் இவ்விரதத்தை அனுஷ்டிக்கலாம். ஏகாதசியிலன்று முழு உபவாசமாக இருப்பது உத்தமம். இயலாதோர் நெல்லரிசியினாலான உணவு வகைகளைத் தவிர்த்து உப்புச் சேர்க்காத உணவை உட்கொள்ளலாம். மறுநாள் துவாதசியினன்று துளசி தீர்த்தம், நெல்லிக்கனி அருந்தி பாரணை அனுஷ்டிப்பர். நியமங்கள் பலவற்றை உள்ளடக்கிய விரதத்தினை அனுஷ்டித்துப் பயன் பெற்றோர் பலர். அவர்கள் வரலாறுகளை ஏகாதசி புராணமானது விதந்துரைக்கிறது. விஞ்ஞான ரீதியிலும் இவ்விரத மகிமை நிரூபிக்கப்படுகின்றது. விரதம் தவத்தை ஒத்தது. தவத்தைப் போன்றே சில கடுமையான நிபந்தனைகளுக்கு உட்பட்டு அமைந்துள்ளது. முறையாகக் கைக்கொண்டுவரின் அவை நல்ல பெறுபேறுகளைத் தரும் என்பதில் ஐயமில்லை.

இவ்விரதத்தை சிரத்தையுடன் அனுஷ்டிப்போர் சகல விதமான துன்பங்கள், பாவங்களில் நின்றும் விடுபட்டும் இம்மையில் நற் பேறுகளைப் பெற்று மறுமையில் நற்கதியடைவர் என்பது திண்ணம். ★



டாக்டர் க.தங்கத்தாமரைச்செல்வம் எழுதிய "மலேரியா நோயும் அதற்கான சிகிச்சை முறைகளும்" நூல் வெளியீட்டு விழா அண்மையில் கிளி.முழங்காவில் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

நூல்வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பூநகரி கல்விக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முகராசாவிடமிருந்து முதற்பிரதியை கிளிநொச்சிக் கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் பொ.தில்லைநாதன் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம். நூலின் ஆசிரியர் மற்றும் கூட்டுறவுத் துறைப்பிரமுகர் எஸ்.ஜெயசிங்கம் ஆகியோரும் காணப்படுகின்றனர். *(படம்: அச்சுவேலி செய்தியாளர்)*

## மக்கள் வங்கியின் கருமபீடம் திறப்பு

சங்கானை மக்கள் வங்கிக் கிளையின் விசேட கருமபீடம் ஒன்று வங்கியின் நடமாடும் சேவைத் திட்டத்தின்கீழ் வட்டுக்கோட்டை சங்கரத்தையில் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது. (ஓ-135)


உ

**சித்தன்கேணி அருள்மிகு ஸ்ரீ நாக கன்னியப்பாள் ஆலய**

**வருடாந்த தைப்பொங்கல் பெருவிழா**

மேற்படி சித்திரபானு வருஷத் தைத்திங்கள் முதலாம் நாள் (15.01.2003) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் அபிஷேகம் ஆரம்பித்து அலங்காரத்தோடு வசந்த மண்டபப் பூசையாகி தீப, தூப உபசாரத்தோடு நாககன்னியம்பாள் திருவீதி எழுந்தருளி 1.00 மணியளவில் தீமிதிப்பு வைபவம் நடைபெறும். அன்றைய நிகழ்ச்சிகளாக க.நித்தியதசீதரன், ஆசிரியர் செ.கந்த சத்தியதாசன் B.A., M.P.அருளானந்தம் ஆசிரியர் ஆகியோரின் சொற்பொழிவுகள் இடம்பெறும்.

*விளம்பர அன்பளிப்பு:*

**சுப்றா**
*சித்தன்கேணி.* (சி-23987)



**தைத்திருநாள் அன்று...**

வாருங்கள்! வந்துபாருங்கள்!!
ஆதரவு தாருங்கள்!!!

யாழ்.விழிப்புலனற்றோர் சங்க வளர்ச்சி நிதிக்காக
சங்க கலைஞர்கள் படைத்தளிக்கும்

**பருவ இராகங்கள்**
இன்னிசை மழை

*காலம்:* 15.01.2003 (தைப்பொங்கல் தினம்)
காலை 10 மணி
மானிப்பாய் பிரதேச சபை நகர மண்டபம்
மாலை 3 மணி
*கைலாசபதி கலையரங்கம், யாழ்.பல்கலைக்கழகம்.*
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (13093)




**BEACON-யாழ்**

**A/L-தமிழ்-2004**
புதிய பிரிவு [ பாலன ]
நாக.தமிழிந்திரன்
புதன், வியா.- 4-5
Note-I ஆரம்பத்திலிருந்து விரிவாகக் கற்பிக்கப்படும்.
II வேறு பிரிவு இல்லை.
வெளி மாணவர்... மாலை நேரம்...
ஆரம்பம:- 16-01-2003
பிற்பகல் 4 மணி
✱இம்மாதத்திற்குரிய கட்டணம் அறவிடப்படமாட்டாது. (13159)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தாயின் மடியில் 09 - 04 - 1913



இறைவன் அடியில் 15 - 12 - 2002

**வடிவேலு சின்னையா**

*(ஓய்வுபெற்ற P.W.D.மேற்பார்வையாளர்)*

*அன்போடு பழகி பண்போடு வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (14.01.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திருமதி
தெய்வநாயகி சின்னையா
குடும்பத்தினர்.

*பத்திரகாளி கோவில் வீதி,*
*பருத்தித்துறை.* (C/26028)

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 18 - 04 - 1935



இறப்பு 13 - 01 - 2002

**அமரர் கந்தையா மகேஸ்வரி**

*(தேநீர்க் கடை, சாவகச்சேரி)*

*ஓராண்டுமாயிற்றோ உம்மை நாம் விட்டுப் பிரிந்து*
*தீராத வேதனையில் துவண்டு நாம் தவிக்கின்றோம்*
*எந்நாளும் உம் முகந்தான் எம் முன்னே தெரியுதன்றோ*
*நெஞ்சத்தில் நிலைபெற்றே இருக்கின்றீர் நிதர்சனமாய்!*
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:
*பெருங்குளம் பிள்ளையார் கோயிலடி,*
*சாவகச்சேரி.* (12611)

தற்காலிக முகவரி:
*92, பழம் வீதி, கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**லெப்.குணசீலன்** (சி.ரமேஷ்) *(இம்ரான் பாண்டியன் படையணி)*

**சி.சோதிமலர்** (சுசி)

| தாயின் மடியில் | தாயக மீட்பில் | தாயின் மடியில் | இறைவனின் பாதக்கமலங்களில் |
|---|---|---|---|
| 1979. 04. 26 | 1998. 02. 06 | 1971. 12. 27 | 1998. 01. 09 |

*எங்கள் அன்புச்செல்வங்களே!*
*அன்னைமடியில் மலர்ந்து - ஓர்*
*உயிரும் ஈருடலுமாக பாசப்பிணைப்புடன்*
*வளர்ந்து எங்கள் எல்லோரையும் - ஆறாத்துயரில்*
*ஆழ்த்திவிட்டு ஒரு மாதத்திற்குள் இறைவனின்*
*பாதக்கமலங்களைச் சென்றடைந்த - எங்கள்*
*அன்புச்செல்வங்களே! ஐந்தாண்டுகள் என்ன*
*எத்தனை ஆண்டுகளானாலும் உங்களின் பிரிவால்*
*ஏற்பட்ட துயரில் இருந்து மீளமாட்டோம்.*

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும்!

அப்பா, அம்மா,
சகோதரர்கள், சகோதரி
மற்றும் உற்றார், உறவினர்.
*(உடுப்பிட்டி)*

*ஆசாரி வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (13097)

# புத்தளத்தில் டெங்கு தொடர்ந்து உயிர்களைப் பலி கொள்கிறது

புத்தளம்,ஜன.14

புத்தளத்தில் டெங்கு நோய் தொடர்ந்து உயிர்ப்பலி எடுத்து வருகிறது. நேற்றுமுன்தினம் மற்றொரு நோயாளியும் பலியானார்.

புத்தளம் ஐந்தாம் குறுக்குத் தெருவில் வதியும் யாழ்ப்பாணம் சோனகதெருவைச் சேர்ந்த அக்பர் - ஜமாலியா தம்பதிகளின் மூன்றாவது புதல்வியான ஃபாத்திமா ஜமீலத் (வயது 8) நேற்றுமுன்தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மரணமானார்.

புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியில் தரம் மூன்றில் இவர் கல்வி கற்றார்.

கடந்த வாரம் 5 வயது மற்றும் 6 வயதுடைய இரு மாணவிகள் மரணமடைந்ததுடன், கடந்த 11ஆம் திகதி 23வயதுடைய ஒரு பெண்ணும், 9 வயதுடைய மாணவியும் பலியாகினர்.

இதேவேளை -

புத்தளம் தள வைத்தியசாலையில் 80 இற்கு மேற்பட்ட டெங்கு நோயாளிகள் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 30 பேர் கொழும்புக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ம)

# டெங்குக்காய்ச்சலைக் கட்டுப்படுத்த புத்தளத்திற்கு மருத்துவக்குழு விரைவு

புத்தளத்தில் பரவிவரும் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த தொற்று நோய்த்தடுப்பு நிபுணர், உயர்மட்ட வைத்திய நிபுணர்கள் ஆகியோர் அடங்கிய குழுவொன்றை நேற்று புத்தளத்துக்கு சுகாதாரஅமைச்சர் அவசரமாக அனுப்பிவைத்தார்.

இக்காய்சலைக் கட்டுப்படுத்த அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் விடுத்த கோரிக்கையின் பேரிலே இக்குழு அனுப்பப்பட்டது.

நோயாளர்களுக்குத் தேவையான வைத்திய உதவிகளைத் துரிதமாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அஸ்வர் புத்தளம் உதவி மாவட்ட வைத்திய அதிகாரியிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவின் நோய்க் கூற்றுப் பகுதியின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஜனாபா லூலு ரஷீத்துடன் நேற்றுக்காலை அவசரமாகத் தொடர்புகொண்டு புத்தளத்தில் டெங்கினால் ஏற்பட்டுள்ள அபாயத்தை விளக்கிய அமைச்சர் அஸ்வர், சுகாதார அமைச்சின் நோய்க்கூற்று ஆய்வுப் பகுதியின் நடமாடும் பிரிவை புத்தளத்துக்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதற்கிடையே, பெருகிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த புத்தளம் நகரசபை, பொது நிறுவனங்கள் ஆகியனவும் பொதுமக்களும் இணைந்து டெங்கு ஒழிப்பு வாரம் ஒன்றை அனுஷ்டிப்பதாக வடமேல் மாகாண சபை உறுப்பினர் எம்.ஐபிஷ்ருல் ஹாபி தெரிவித்தார். (ம)

# பொறுப்பேற்கப்படாத இரு சடலங்கள் யாழ்.ஆஸ்பத்திரியில

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமான இருவரின் சடலங்கள் உறவினர்களால் பொறுப்பேற்கப்படாமல் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியைச் சேர்ந்த ஆர்.மரியம்மா என்பவர் 10 ஆம் திகதி மரணமானார். அவரை வைத்தியசாலையில் அனுமதித்தவர்களால் வழங்கப்பட்ட ஆர்.சிவகுமார், இல37, மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு தகவல் அனுப்பப்பட்டும் அவரது சடலம் இன்னும் உறவினர்களால் பொறுப்பேற்கப்படவில்லை.

இதேவேளை - கடந்த 9 ஆம் திகதி சுயநினை விழந்த நிலையில் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு, சில மணி நேரத்தில் அங்கு உயிரிழந்த பெயர் விவரம் தெரியாத மற்றும் ஒருவரது சடலமும் கடந்த 6 நாள்களாக வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இவரை இனங்கண்டு சடலத்தை பொறுப்பெடுக்கும் படியும், மரியம்மாவின் உறவினர்களை உடன் வந்து சடலத்தை பொறுப்பெடுக்குமாறும் வைத்தியசாலை நிர்வாகத்தால் கோரப்பட்டுள்ளது. (ம-15)

## இலவச மருத்துவ முகாம்

கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரம நிர்வாகத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவமுகாமும கண்பரிசோதனையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆசிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த மருத்துவ முகாமில் நீரிழிவுப் பரிசோதனையும் மேற்கொள்ளப்படவுள்ளது. (ஒ-10)

## கைதடி சிறுவர் இல்ல புதுவிழா நிகழ்வு

இந்து சமயப் பேரவையின் கைதடி சைவச் சிறுவர் இல்லம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

யுத்த நடவடிக்கைகளால் சேதமடைந்திருந்த சிறுவர் இல்லக் கட்டடங்கள் புனரமைக்கப் பட்டதையடுத்தே மீண்டும் திறந்து வைக்கப்படுகிறது.

# இராணுவப் பெண் சிப்பாய் ஆணாக மாறிய விந்தை!

கொழும்பு,ஜன.14

இராணுவ பெண் சிப்பாய் ஒருவர் ஆணாக மாறிய சம்பவம் ஒன்று குருநாகல் வைத்தியசாலையில் நடந்திருக்கிறது.

இந்த விசித்திரம் பற்றி தெரிய வருவதாவது:-

பிரியங்கிகா மெனிக்கே ஓர் அழகான பெண். உதட்டில் 'லிப்டிக்ஸ்' நீண்டகரிய கூந்தல் மொத்தத்தில் வரைவிலக்கணமான ஒரு வனிதை.

சம்பவம் இடம்பெற்ற அன்று - கடந்த 10 ஆம் திகதி - 'அவள்' தனதுகணவரின் தாய் வீட்டிலிருந்து முச்சக்கர வண்டியில் தனியாக வந்து கொண்டிருந்தாள் அப்போது முச்சகர வண்டி விபத்துக்குள்ளானது. பிரியங்கிகா படுகாயமடைந்து குருநாகல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டாள்.

சத்திர சிகிசசையின் போது அழகி பிரியங்கிகா ஓர் ஆண் என்பது வைத்தியர்களுக்குத் தெரியவந்தது. உடனடியாக வைதியசாலைப் பொலீஸாருக்கு விஷயம் அறிவிக்கப்பட்டது.

பிரியங்கிகாவிடம் இருந்த அடையாள அட்டை போலியானது என்பதும் 29 வயதான அவரது உண்மையான பெயர் எம்.ஏ.கருணாரட்ண என்பதும் - தன்னினச் சேர்க்கையில் ஆர்வம் கொண்ட இவர், குருநாகலைச் சேர்ந்த உஹுமிய கிரலபொக்கே என்ற இராணுவச்சிப்பாயை ஒரு வருடத்துக்கு முன்னர் திருமணம் செய்திருக்கின்றார், என்பதும் பொலீஸ விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம)

# காய்ச்சலால் மற்றொருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்.ஜன.14

9 நாள் காய்ச்சல் என அனுமதிக்கப்பட்ட இளம்பெண் ஒருவர் நேற்று யாழ்.ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார். கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்ட கிளிநொச்சியை சேர்ந்த ரி.நளினி(வயது20) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

இதேவேளை -

யாழ்.குடாநாட்டில் பரவிவரும் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்ட மேலும் இருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்குக்காய்ச்சல் என்ற சந்தேகத்தின் பேரில் அனுமதிக்கப்பட்ட அவர்கள் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ம-15)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1927 - 03 - 01

விண்ணில் 2001 - 12 - 26



அமரர்

**பொன்னம்பலம் தெய்வேந்திரம்**

*(மு.பொன்னம்பலம் அன்சன்ஸ் நகை வாணிபம்)*

திதி: 14.01.2003

ஆண்டு ஒன்று அகன்றாலும் அகலா நினைவுகளுடன்...

*178(70) சிவன் பண்ணை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (13214) -குடும்பத்தினர்.



## கண்ணீர் அஞ்சலி

எமது சக அலுவலர் செல்வி சண்முகலிங்கம் கொங்காதேவி (மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகம்) அவர்களின் அன்புத் தந்தையார்

**செல்லையா சண்முகலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.* (c/26054) யாழ் மாவட்ட செயலக ஊழியர்களும், நலன்புரிக்கழக உறுப்பினர்களும்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அரியாலை மேற்கைச் சேர்ந்த ஆர்மோனிய இசையரசு கலைஞானகேசரி

**திரு.எஸ்.பொன்னுத்துரை**

அவர்கள் கர்நாடக இசையிலும் மேற்கத்திய இசையிலும்செய்த சாதனைகளுக்காக இந்து சமய காலாசார அமைச்சு 26.12.2002 அன்று "கலாபூஷணம்" விருது வழங்கிக் கௌரவித்தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*120, ஆசீர்வாதப்பர் வீதி.*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

ப.கேசவநாதன் குடும்பத்தினர்
(தொலைத்தொடர்பு நிலைய உத்தியோகத்தர், மன்னார்). (13194)



## தவறிவிட்டன

நாகராஜா மதியழகன் என்பவரது இல. 400, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி என்னும் முகவரியுடைய தேசிய அ.அ (732223304v), அரசொல்லை, அளவெட்டி வடக்கு என்னும் முகவரியுடைய விசேட அ.அட்டை, மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் என்பன கொக்குவில் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

*N.நடராஜா,*
*இல.61, பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (13211)



## காணாமற் போய்விட்டது

கைத்தொலைபேசி ஒன்று நேற்று 13.01.2003 திங்கட்கிழமை நண்பகல் நாவற்குழிச் சந்திக்கும் கோயிலாக் கண்டிச் சந்திக்குமிடையில் காணாமற்போய்விட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள், கதிரமலை, கமலக்கண்ணன் கைதடி, நாவற்குழிதெற்கு, என்ற முகவரிக்குத் தகவல் தரவும் சன்மானம் வழங்கப்படும். (13212)



## ரவி அன் ராஜ் சில்க் இடம்மாற்றம்

இதுவரை நாளும் இல.77, பெரியகடை வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்து கொண்டிருந்த எமது

**ரவி அன் ராஜ் சில்க்ஸ்**

தற்சமயம் நாளை 15.01.2003 தைப்பொங்கல் தினம் முதலாக நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்பாக இல. 618A, பருத்தித்துறை வீதியில் தற்காலிகமாக இயங்கவுள்ளது என்பதை எமது அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

நாளை புதன் காலை 10.00 மணியளவில் நடைபெறவுள்ள வரவேற்புபசார வைபவத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்று வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**ரவி அன் ராஜ் சில்க்ஸ்**

77, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
618A, பருத்தித்துறை வீதி,(நல்லூர் கந்தசுவாமி கோயில்முன்பாக), நல்லூர், யாழ்ப்பாணம். (சி-26049)



## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்
## வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம்:- 26.01.2003 ஞாயிறு காலை 9மணி
இடம் :- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபம்
தலைமை:- மன்றத் தலைவர்

நிகழ்ச்சி நிரல்

I. இறை வணக்கம்
II. வரவேற்புரை
III. தலைமையுரை
IV. சென்றகூட்ட அறிக்கை
V. செயற்பாட்டறிக்கை
VI. கணக்கறிக்கை
VII. சிறப்பு விருந்தினர் உரை
VIII. புலமைப்பரிசில் வழங்கல்(அமரர் நமசிவாயம் நினைவாக)
IX. நடப்பு வருடத்துக்கான புதிய நிர்வாகி தெரிவு
X. நன்றியுரை

- மன்றின் விடயமாக பிரேரணைகள் இருந்தால் 20.01.2003 ஆம் திகதிக்குமுன் எழுத்து மூலம் செயலாளருக்கு அனுப்பி வைக்கவும். மன்றின் விசேஷ நிர்வாகக் கூட்டத்தின் விடயம் ஆராயப்பட்டு நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதற்காக.
- உரிமையாளர்கள் மட்டும் (மன்றின் அங்கத்தவர்கள்) தவறாது கலந்துகொள்ளவும்.
- நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும், அரச உயர் அதிகாரிகளும், அரசியல்துறைப் பொறுப்பாளர்களும் கலந்து கொள்வார்கள். எமது எதிர்கால நடவடிக்கை சம்பந்தமாக (எமது பேரழிவு) தீர்க்கமான முடிவு ஒன்றை எடுக்க இருப்பதால் அனைத்து உறுப்பினர்களும் தவறாது சமுகம் தரவும்.
- 2002 ஆம் ஆண்டின் அங்கத்துவத்தை உறுதிசெய்ய 25.01.2003 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

*கைத்தொழில் வணிகர் மன்றம்,*
*சாவகச்சேரி.* (C/26055)
Dr. சு.கி.அருளானந்தம். (செயலாளர்).

# மாணவருக்கு இழைக்கப்பட்ட அநீதியும் யாழ்.பல்கலை நிர்வாகத்தின் அவசரமும்

**2002 - 2003(ஏ) கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கை இங்கு பிரசுரமாகிறது.**

காலம் காலமாக ஆட்சிக்குவந்த பேரினவாத அரசுகள் தமிழ்மக்களின் உரிமைகளைப் பறிக்கத் திட்டமிட்டு செயற்பட்டு வந்ததே எமது மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு வித்திட்டது என்பது வெளிச்சமாகும்.

உயிரையும் இழந்தோம் எமது உடைமையும் இழந்தோம் ஆனால், தமிழர்களின் கல்வியை பறிக்க அவர்களால் முடியவில்லை. எனவே, அதற்காகவே தயாரிக்கப்பட்ட தரப்படுத்தல் முறையை கொண்டுவந்து தமிழ் மாணவர்களின் கல்வியிலும் தனது இனவாத இறுக்கத்தை காண்பித்தனர். அதன் காரணமாக தமிழர் விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்து இன்று ஒரு தீர்க்கமான கட்டத்தை அடைந்திருக்கின்றது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவானது பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது அனுமதிமுறைகளை மாற்றி மாற்றி தமக்கு சாதகமான அனுமதிக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றது. எனினும், தற்போதுள்ள அதன் அனுமதிக் கொள்கையின்படி,

- ★ தீவளாவிய திறமை (Island Merit) அடிப்படையில் = 40%
- ★ மாவட்ட திறமை (District Quota) அடிப்படையில் = 55%
- ★ பின்தங்கிய மாவட்ட அடிப்படையில் (Educationally disadvantaged district) அடிப்படையில் = 05%

என்ற வீதத்தில் பல்கலை அனுமதி வழங்கப்படுகிறது.

இங்கு மாவட்டத்திறமை என்பது மாவட்டத்தில் உள்ள மக்களின் சனத்தொகையிலேயே தங்கியுள்ளது. மானிய ஆணைக்குழு 1993/1994 கல்வியாண்டை ஒரு நியம ஆண்டாகக் கருதியே அனுமதியினை மேற்கொள்கிறது.

1991ஆம் ஆண்டு தொகை மதிப்பு புள்ளிவிவரவியல் திணைக்களம், குடிசன மதிப்பீட்டை நடத்தாததால் 1981ஆம் ஆண்டு புள்ளி விவரத்தின்படியே ஒரு மாவட்டத்துக்குரிய அனுமதி எண்ணிக்கை வரையறுக்கப்படுகிறது.

உதாரணமாக மருத்துவபீடத்தை எடுத்துக்கொண்டால்

| | |
|---|---|
| 1981ஆம் ஆண்டு மொத்த சனத் தொகை | = 14,846, 750 |
| மொத்த அனுமதி | = 839 |
| தீவளாவிய திறமை (40%) | = 324 |
| பின்தங்கிய மாவட்டம் (5%) | = 42 |
| மாவட்ட கோட்டா | = 839-(324+42) |
| | = 473 |
| சனத்தொகை விகிதம் | = 14,846,750 / 473 |
| | = 31,388 |

ஆகவே, சனத்தொகையில் ஒவ்வொரு 31,388 பேருக்கு ஒவ்வொரு மாணவர் தெரிவாவர்.

இதன்படி மாவட்ட ரீதியான சில தெரிவுகளை கீழுள்ள அட்டவணையில் அவதானிக்கலாம்.

| மாவட்டம் | சனத் தொகை 1981 | மேற்படி எதிர்பார்க்கப்படும் இடங்கள் | ஒதுக்கப்பட்டது 1993/1994 | | |
|---|---|---|---|---|---|
| | | | District-quota | [illegible] | Total |
| யாழ்ப்பாணம் | 738 788 | 738 788 / 31 388 Ω 24 | 24 | - | 24 |
| கிளிநொச்சி | -91 754 | 91 764 / 31 388 Ω 3 | 4 | - | 04 |
| வவுனியா | 95 488 | 95 488 / 31 388 Ω 3 | 4 | - | 04 |
| அம்பாந்தோட்டை | 424 344 | 424 344 / 31 388 Ω 14 | 24 | - | 24 |
| அநுராதபுரம் | 537 929 | 587 929 / 31 388 Ω 27 | 27 | - | 27 |

இந்த வேறுபாடுகளை உடைய 1993 - 1994 கல்வியாண்டை நியம ஆண்டாகக் கொண்ட பல்கலை அனுமதி விதிமுறையில் 1993 - 1994 ஆண்டு கல்வியாண்டில் ஒதுக்கப்பட்ட மாணவர் தொகையை விட குறையாத வகையில் மாணவர்கள் மாவட்ட ரீதியில் தெரிவுசெய்யப்படுவர் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் பார்க்கும்போது 1993 - 1994 கல்வியாண்டில் மாவட்ட கோட்டாவில் 24 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். ஆகவே, மானியங்கள் ஆணைக்குழு ஆகக் குறைந்தது 24 மாணவர்களையே கோட்டா அடிப்படையில் தெரிவுசெய்யவேண்டும்.

1993 - 1994 கல்வியாண்டில் கல்வியால் பின்தங்கிய மாவட்டத்தில் மாவட்டம் உள்ளடக்கப்படவில்லை. ஆனால், தற்போது மானிய ஆணைக்குழு வெளியிட்ட பின்தங்கிய 13 மாவட்டங்களில் யாழ்.மாவட்டமும் இடம்பெற்றுள்ளது.

எனவே, பின்தங்கிய மாவட்டத்திற்குரிய 45 அனுமதியில் ஆகக்குறைந்தது 2 அனுமதி கிடைக்கவேண்டும். எனவே, ஆகமொத்தம் யாழ்.மாவட்டத்திற்கான அனுமதி ஆகக்குறைந்தது கீழுள்ள அட்டவணையில் உள்ளது போன்று அமைந்து இருக்கவேண்டும்.

மருத்துவத்துறை

| | தீவளாவிய திறமை | மாவட்ட கோட்டா | பின்தங்கிய மாவட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| எதிர்பார்ப்பு | 10 | 24 | 2 | 36 |
| கிடைத்த அனுமதி | 10 | 21 | - | 31 |

ஆனால், கடந்த காலங்களில் இந்த அனுமதி பின்வருமாறு அமைந்திருந்தது.

| கல்வி ஆண்டு | Is. merit | District |
|---|---|---|
| 1999/2000 | 21 | 32 |
| 2000/2001 | 15 | 28 |
| 2001/2002 | 06 | 26 |
| 2002/2003 | 16 | 28 |
| 2002/2003(A) | 10 | 21 |

இதேபோன்ற குளறுபடிகள் ஏனைய துறைகளிலும் இடம்பெற்றுள்ளன. உதாரணமாக பொறியியல்துறையிலும்.

| கல்வி ஆண்டு | Is. merit | District |
|---|---|---|
| 1999/2000 | 98 | 34 |
| 2000/2001 | 58 | 33 |
| 2002/2003 | 29 | 28 |
| 2002/2003(A) | 16 | 18 |

தமிழ் மாணவரின் பல்கலை அனுமதியில் கடந்த காலத்தில் திட்டமிட்டு பொதுவான குறைப்பு இடம்பெற்றுள்ளது. ஆனால், இம்முறை சடுதியான குறைப்பு இடம்பெற்றுள்ளது.

எனினும், பல்கலைக்கழக நிர்வாகம் 2002-2003 A கல்வியாண்டுக்குரிய விரிவுரைகளை முன்னைய ஆண்டுடன் இணைத்து விரைவாக ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட மாணவர்கள் இதனால் மிகவும் உளவியல் ரீதியில் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும், ஏனைய பல்கலைக்கழகங்கள் யாவும் அவசரப்பட்டு விரிவுரைகளை ஆரம்பிக்காமல் இருக்க, யாழ்.பல்கலைக்கழகம் மட்டும் முந்திக்கொண்டு ஆரம்பிப்பதன் காரணம் எமக்குப் புரியவில்லை. மேலும், விரிவுரைகளை விரைவில் ஆரம்பிப்பது போன்ற போலித்தோற்றத்தை ஆட்சியாளர்களிற்கும் மானிய ஆணைக்குழுவிற்கும் காட்டி தங்களை நல்ல பிள்ளையாகக் காட்டிக்கொள்ளும் நோக்கத்திற்காக எமது எதிர்கால மாணவர் சமுதாயத்தின் பல்கலைக்கழக அனுமதிக் கனவை பலியாக்க முயற்சிப்பதை பொறுப்புள்ள பல்கலைக்கழக மாணவர்ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

மேலும், மாணவர்களை அனுமதிப்பதில் காட்டிவரும் அவசரம் அவர்கள் கல்வியியல், ஆசிரியர் பற்றாக்குறை, வசதி குறைவு ஆகியவற்றில் உரிய தீர்வைப் பெறுவதில் காட்டுவதில்லை. எனவே, இச்செயன்முறை, ஆட்சியாளர்களிற்கு நல்ல ஒரு தோற்றத்தை காட்டுவதற்காகவோ அன்றி வேறுசில காரணங்களிற்காகவோ வலிந்துகொண்டு மானியங்கள் ஆணைக குழுவில் இருந்து விசேடமாகப் பெறப்பட்ட தொலைநகல் (Fax) மூலம் மாணவர் விவரங்களை மட்டும் வைத்துக்கொண்டு விசேட உள் வாங்கல் (Special Intake), வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி (Waiting list), அனுமதி நிராகரிக்கப்பட்ட மாணவர் பட்டியல் (Pending list) ஆகியவற்றின் மூலம் தெரிவுசெய்யப்படும் மாணவர்களையும் புறக்கணித்துக் கொண்டு பல்கலைக்கழகம் விரைவாக கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது எமக்கு மிகுந்த சந்தேகத்தையும் கவலையையும் அளிக்கின்றது.

எனவே 2002-2003A கல்வியாண்டுக்குரிய விரிவுரைகளை ஒத்திப்போடுமாறு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரை கேட்டுக்கொள்கிறோம். (2002-2003 கல்வியாண்டு மாணவருக்கு உரிய விரிவுரைகளைத் தொடக்குவதில் தடை ஏதும் இல்லை) அத்துடன் 2002-2003A கல்வியாண்டில் தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களும் தமது உடன் பிறப்புக்களின் கல்விக் கனவை நனவாக்குவதில் உரிய ஒத்துழைப்பு வழங்குவர் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நம்புகிறது.

இங்கு 1993-1994 கல்வியாண்டு அதாவது நியம ஆண்டில் 18 இடங்கள் யாழ்.மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டபோது ருகுணு பல்கலைக்கழக பொறியியல்பீடம் ஆரம்பிக்கப்படவில்லை. அதன்பின் சுமார் 200வரையான மாணவர்கள் மேலதிகமாக உள்வாங்கப்பட்டபோதும் யாழ். மாணவர்களுக்கான கோட்டா எதுவும் மேலதிகமாக ஒதுக்கப்படவில்லை. அதனைவிட கல்வியில் பின்தங்கிய மாவட்டத்திற்குரிய அனுமதியும் வழங்கப்படவில்லை. கலைப்பீட அனுமதியை நோக்குவோமாயின் 1993-1994 கல்வியாண்டில் ஒதுக்கப்பட்ட தொகை 122 ஆகும். கலைப்பீட மாணவர் தெரிவான 100 வீதம் தீவளாவிய திறமை அடிப்படையில தெரிவுசெய்யப்படுகிறது. எனினும், குறித்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்படும் கோட்டா இடங்களைவிட குறைப்பு செய்யமுடியாது. இது இவ்வாறிருக்க 93/94 கல்வியாண்டில் கலைத்துறைக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் தொகை 2589 ஆகும். ஆனால், தற்போதுள்ள அனுமதி எண்ணிக்கை சுமார் 4000 ஆகும். சுமார் 1500 மாணவர்கள் தீவளாவிய ரீதியில் அதிகரிக்கப்பட்டபோதும் யாழ்.மாவட்டத்திற்கென எதுவித மேலதிக அனுமதியும் இல்லாமல் 120 மாணவர்களே தெரிவுசெய்யப்பட்டனர். இதேபோன்ற பாதிப்புக்கள் வர்த்தகத்துறையிலும் இடம்பெற்றுள்ளன.

1981ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் குடிசன மதிப்பீடு இடம்பெறவில்லை. 2001ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உத்தேசமாக எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் மதிப்பீட்டைக்கொண்டு யாழ்ப்பாண தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியைத் தீர்மானிப்பது என்பது தமிழ் மாணவர்களின் உயர்கல்வியில் ஆப்பு வைக்கும் பாரிய துரோகத்தனமான செயற்பாடு ஆகும்.

எனவே, இது தொடர்பில் யாழ். மாணவர்கள், வெட்டுப் புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர் அமைப்பு ஒன்றை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாநாட்டு மண்டபத்தில் கூடி அமைத்து இது தொடர்பான சட்ட ரீதியான, அரசியல் ரீதியான அழுத்தங்களைக் கொடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

ஆரம்பகாலங்களில் தமிழ்மக்களும், மாணவர்களும் சாத்வீக ரீதியில் நடத்திய போராட்டங்கள் ஒடுக்கப்பட்டதாலேயே இன்று அது பெரும் விடுதலைப் போராட்டமாக உருவெடுத்தது. தற்போது நிலவிவரும் சமாதான வேளையிலும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தமது கோரிக்கைகளுக்கு சாத்வீகமான ரீதியில் தீர்வுபெற்றுத்தருமாறு எமது மாணவர் ஒன்றியத்தை கோரியிருந்தனர்.

அத்துடன் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் அனைவரும் இவ்விடயத்தில் எமது மாணவர்களிற்கு உரிய ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்பதிலும் நாம் நம்பிக்கையாகவுள்ளோம்.

## இலவசப் பாடநூல் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தால் கல்வி வலயங்களுக்கு ஒருதொகுதி இலவசப் பாடநூல்கள் வழங்கப்படவுள்ளன.

கடந்த ஆண்டில் யாழ்.மாவட்டத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட பாடநூல்களில் ஐந்து வலயங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னர் மிகுதியாக இருந்த நூல்களே இவ்வாறு வழங்கப்படவுள்ளன.

கடந்த காலங்களில் யாழ்மாவட்டத்துக்கான நூல்கள் யாவும் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையின் ஊடாகவே கல்வி வலயங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு வந்தன. ஆனால், இந்த ஆண்டு இந்த நடைமுறை மாற்றப்பட்டு நூல் வெளியீட்டுத் திணைக்களத்தினால் எடுத்துவரப்பட்டு ஒவ்வொரு கல்விக் கோட்டத்துக்கும் நூல்கள் நேரடியாக வழங்கப்பட்டன.

- இவ்வாறு வழங்கப்பட்ட நூல்களும் இன்னும் முழுமையாக வழங்கப்படவில்லை. இந்த நிலையிலேயே மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையால் பாடநூல்கள் வழங்கப்படவுள்ளன. ஆங்கிலம், சைவநெறி, கணிதம், சுகாதாரமும் உடற்கல்வியும், விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் மற்றும் சிங்களம் ஆகியவற்றுக்கான பாடநூல்களோ இவ்வாறு வழங்கப்படவுள்ளன. (ஒ-10)

## இராணுவத்தினரின் 'ஜோடி சேர்தல்'

**கடந்த ஆண்டு இறுதியில் வெளிவந்த இராணுவ அதிகாரிகள் சம்பந்தப்பட்ட செய்தி குறித்து 'லங்கா தீப' பத்திரிகையில் ரத்னபாலகே எழுதிய ஆக்கத்தின் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.**

2002ஆம் ஆண்டு முடிவடைவதற்கு சில தினங்களின் முன்னர் இராணுவத் தரப்பில் இடம்பெற்ற இரு சம்பவங்கள் பற்றி செய்திகள் வெளிவந்துள்ளன. அவற்றில் ஒரு சம்பவம் இராணுவத்தினருள் காணப்படும் தகுதிநிலை குறித்து உருவான அபிப்பிராயபேதங்களால் இடம்பெற்றதாகும்.

மற்றைய சம்பவம், இருபது ஆண்டு காலம் தொடர்ச்சியாக இடம்பெற்ற யுத்தம் நிறுத்தப்பட்டமையால் மகிழ்ச்சியான சூழலில் இராணுவத் தளபதி உட்பட இராணுவ உயரதிகாரிகள் சிலர் அவர்களது மனைவிமாருடன் கலந்துகொண்ட கொழும்பு 'தாஜ்சமுத்திரா' ஹோட்டலில் இடம்பெற்ற வருட இறுதி 'ஜோடி சேர்தல்' நடன நிகழ்ச்சியாகும்.

இராணுவ 'சேவா வனிதா' பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சிக்கான நுழைவுக் கட்டணம் நபரொருவருக்கு 1200 ரூபாவாகும். இதில் கலந்துகொள்ள விரும்புவோர் தமது

**தமிழில்: வியெஸ்ரீ**

சொந்தச் செலவிலேயே பிரவேசச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்யுமாறு கேட்கப்பட்டமையால் பலர் இதில் கலந்துகொள்ள ஆர்வம் காட்டவில்லை. வேறு சிலர் குறுக்குவழிகளில் - அரச கணக்குகளில் - உள்ள ஒதுக்கீடுகளிலிருந்து பிரவேசச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். 'கஜபா' படையணியைச் சேர்ந்த 25 அதிகாரிகள் தமது மனைவிமார்களுடன் கலந்துகொள்ளும் பொருட்டு படையணி நிதியிலிருந்து 50 பிரவேசப் பத்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

ஒரு மேசையில் பத்துப்பேர் அமரத்தக்க ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்ததுடன், ஒரு மேசைக்கு ஒரு விஸ்கிப் போத்தல் வீதம் விநியோகிக்கப்பட்டது. இரவு 9.30 மணிக்கு ஆரம்பமான நடன நிகழ்ச்சி, அதிகாலை 4.15 மணிவரை நீடித்தது. இராணுவ இசைக் குழுவினர் இசை நிகழ்ச்சியை வழங்கியதுடன், 'ஜோடி சேர்ந்து ஆடும்' இந்த நடன நிகழ்ச்சியில் போட்டியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்போட்டியில் இராணுவப் பொலீஸ் பிரிவைச் சேர்ந்த கேணல் ஒருவரும் அவரது ஜோடியாகக் கலந்துகொண்ட அவரது மனைவியும் வெற்றி பெற்றனர். அரச தொலைபேசியைப்

**மாற்றார் தோட்டத்திலிருந்து....**

பாவித்து இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு தொலைபேசி உரையாடலை மேற்கொண்டதான குற்றச்சாட்டில், அத்தொகையை அவரது சம்பளத்திலிருந்தும் அறவிடுமாறு பணிக்கப்பட்டதுடன், அவரது பதவியுயர்வும் பின்போடப்பட்ட நிலையிலிருந்த அக்கேணல், முன்னுக்கு வருவதற்கு இந்த நடனப் போட்டி வாய்ப்பளித்ததாக அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் கருதினர். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டமையையிட்டு அனைவரும் மகிழ்ச்சியடைந்ததுடன் யுத்தத்துக்குத் தற்காலிக ஓய்வு கிடைத்திருப்பதால் படையினருக்கும் சிறுசிறு கேளிக்கைகளில் ஈடுபடச் சந்தர்ப்பம் வழங்கப்பட்ட வேண்டுமென்பதே அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டோரின் அபிப்பிராயமாகும்.

16 ஆயிரத்திற்கும் அதிகமான தமது சகோதர படைவீரர்கள் யுத்தத்திற்குப் பலியாகியுள்ள வேளையில் இந்த நிகழ்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட நிதியை சர்வராத்திரி பிரித் நிகழ்ச்சிக்கும் தானத்திற்கும் செலவிட்டிருந்தால் இராணுவத்தினர் மற்றவர்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்ந்திருப்பர் என்பது இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளாத நபர்களது கருத்தாகும். ★

## 3ஆவது ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 - 05 - 1932 | 07 - 12 - 2000 |

### அமரர் முருகன் சன்னதி

*திதி: 14.01.2003*

அன்புடன் வாழ்ந்து முருகன் கழலடைந்த
அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து
மூன்று ஆண்டுகள் மறைந்தாலும் நினைவு மட்டும்
என்றும் மறையவே மறையாது!

*பட்டியோடை,*
*அல்வாய் கிழக்கு.* (13198) - குடும்பத்தினர்.

---

## அளவெட்டி - மல்லாகம்
### பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)
#### சகல அங்கத்தவர்களுக்குமான
## முக்கிய அறிவித்தல்

எமது சங்க கிளைக்குழுத் தேர்தலுக்காக 31.12.2002 இல் மூடப்பட்ட அங்கத்தவர் பெயர் விவரமடங்கிய வாக்காளர் பட்டியல்கள் 13.01.2003 தொடக்கம் 27.01.2003 வரை பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளன. அவற்றை பின்வரும் எமது விற்பனை நிலையங்களிலும், தலைமைக் காரியாலயத்திலும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

| கிளை இல. | காட்சிப்படுத்தும் விற்பனை நிலையங்கள் |
|---|---|
| 01 | கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி கிளை 01 |
| 02 | தபாற்கந்தோரடி, அளவெட்டி கிளை 02 |
| 03 | ஆலடி, அளவெட்டி தெற்கு கிளை 03 |
| 04 | முதலியார் கோயிலடி, அளவெட்டி கிளை 04 |
| 05 | 4 ஆவது கிளை முதலியார் கோவிலடி, அளவெட்டி |
| 06 | கணேஸ்வரம், அளவெட்டி கிளை 06 |
| 07 | அளவெட்டி தெற்கு, அளவெட்டி கிளை 07 |
| 08 | மல்லாகம் சந்தி கிளை 08 |
| 09 | கல்லாரை, மல்லாகம் கிளை 09 |
| 10 | குளமங்கால், மல்லாகம் கிளை 10 |
| 11 | அளவெட்டி தெற்கு, கலைநகர் கிளை 11 |
| 12 | நீதிமன்ற வீதி, மல்லாகம் கிளை 12 |
| 9ஏ | கே.கே.எஸ்.றோட், மல்லாகம் கிளை 9ஏ |

*ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 31.01.2003 ஆம் திகதிக்கு முன்னர் சங்க செயலாளருக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

தலைவர். 13.01.2003. - செயலாளர். (C/26050)

---

## சமய சந்நிதிகளில்

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் வருடாந்த மகா குருபூசை எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையை காமகோடி காயத்திரி பீடத்தின் சுவாமி ஸ்ரீராஜ் குமார் நிகழ்த்தவுள்ளார். சிறப்புரைகளை நா.திருச்செந்திநாதன், வைத்தியகலாநிதி வ.சின்னப்பு, வைத்திய கலாநிதி கே.ரி.எஸ்.சபாநாதன் ஆகியோர் நிகழ்த்துவர். (ஒ-10)

* * *

மாதகல் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த சனிக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமையன்று காலை 7 மணிக்கு திருப்பலி பூசையும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளது. (ஒ-135)

* * *

இணுவில்,ஜன.14

காரைநகர் பயரிக்கூடல் சுப்பிரமணியசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் கடந்த வியாழக்கிழமை முதல் நடைபெற்று வருகிறது. தேர்த்திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கும் தீர்த்த உற்சவம் மறுநாள் சனிக்கிழமையும் நடைபெறும்.

* * *

இணுவில்,ஜன.14

கோண்டாவில் வடக்கு ஞானவைரவர் ஆலயத்தின் பொங்கல் விழா எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை 3 மணியளவில் நடைபெறவுள்ளது.

* * *

பொலிகண்டி, கருப்பைமுலை சித்திவிநாயகர் ஆலயத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த அன்னதானம் வழங்கல் ஆரம்பமானது. பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இது தொடர்ந்து இடம்பெறும் என்று ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ஒ-10)

* * *

சண்டிலிப்பாய் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் இன்று காலை 7 மணிக்கு திருவாசகமுற்றோதல் இடம்பெறவுள்ளது.

---


## கண்ட கற்கள் தேவை

3", 4", 6", 9" அளவுகளுள்ள பெரிய கற்கள் 1000 டிராக்டர் லோட் தேவை. விலை பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

*தொடர்:*
பாமினி என்ஜினியர் அன் கொன்றக்டஸ்
(C.T.B. அருகில்)
கோண்டாவில் கிழக்கு,
(13203) கோண்டாவில்.


---



*ஸ்ரீ ராம ஜெயம்*

### பொன்னாலை திருவருள் மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
### வைகுண்ட ஏகாதசி திவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம்

**இரதோற்சவம்:** மார்கழி மாதம் 30 ஆம் நாள் இன்று (14.01.2003) செவ்வாய்க்கிழமை
அதிகாலை 4 மணிக்கு **சங்காபிஷேகம் பூஜை,**
காலை 6 மணிக்கு **சொர்க்கவாசல் தரிசனம்,**
காலை 10 மணிக்கு **வசந்த மண்டப பூஜை,**
முற்பகல் 11 மணிக்கு **இரதோற்சவம்.**

இரவு வைகுண்ட ஏகாதசி புராணபடனமும், பஜனையும் நடைபெறும்.

**தீர்த்தோற்சவம்:** தைமாதம் முதலாம் நாள் (15.01.2003) புதன்கிழமை காலை தீர்த்த உற்சவம் திருவடிநிலையில் நடைபெறும்.

**மஹோற்சவகுரு:** சிவாகம கிரியாசிரோமணி சிவஸ்ரீ ச.சோமாஸ்கந்தக்குருக்கள் (13192)

*குறிப்பு:* வருடாந்த பஜனை ஊர்வலம் எதிர்வரும் 19.01.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு பொன்னாலையில் இருந்து (ஆலயத்தில்) புறப்பட்டு பொன்னாலைச் சந்தி, மூளாய், மாவடி ஊடாக நண்பகல் சித்தன்கேணி பிள்ளையார் கோயிலைச் சென்றடையும். அங்கிருந்து புறப்பட்டு சுழிபுரம், மூளாய் ஊடாக இரவு 7 மணிக்கு மீண்டும் ஆலயத்திற்கு வந்து சேரும்.

*பொன்னாலை,* - தேவஸ்தான பரிபாலனசபை.

---


SATS-TECH SUN NETWORK

## எமது வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

SUN TV - KTV, SCV, Sun News உட்பட Sun Network சனல்களைப் பார்க்க விரும்புகின்றீர்களா? எம்முடன் தொடர்புகொள்ளவும். Sun Network சனல்களை ஒளிபரப்பும் கேபிள் TV ஒப்ரேட்டர்களும் உடன் தொடர்பு கொள்ளவும். அத்துடன் RAJ TV, RAJ PLUS, S.S. Music, PHODIGAI, WIN TV, THMILAN TV, JAYA TV உட்பட 7 தமிழ் சனல்களையும் ஒரே நேரத்தில் அன்ரனாவைத் திருப்பாமல் பார்க்கக் கூடியவாறு வடிவமைக்கப்பட்ட 10' DIGITAL SYSTEM Rs. 38,000 மட்டுமே!

*மேலதிக விவரங்களுக்கு:*

**SATS - TECH ENGINEERS**
C/o NATIONAL VIDEO CENTRE,
182, K.K.S. Road,
Kokuvil. T.P. : 0777-710785
(13202)


---

## மரண அறிவித்தல்கள்

### சூசைப்பிள்ளை அன்னம்மா
*(செட்டிப்பிள்ளை, இளவாலை)*

இளவாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை அன்னம்மா 12.01.2003 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளையின் மனைவியும் பிலோமினா, லில்லி, மரியநாயகம், சந்தானசாமி (U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை, மரியப்பிள்ளை (புளியடி வைத்தியர்), திருமதி சூசைப்பிள்ளை றோசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகாதேவன், ஜெயக்குமார், புனிதம், ராசா (U.K.) ஆகியோரின் மாமியாரும், இலங்காதரன்(பேராதனை பொறியியற்பீடம்), யோஸ்மிலா, பாரதி (U.K.), அனோமிலன் (மருத்துவபீடம் கொழும்பு-8), நந்தன் (U.K.), பியோமிலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.01.2003) செவ்வாய்க்கிழமை பி.ப.3.00 மணிக்கு புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, திருப்பலியின் பின் புனித அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.மகாதேவன். (மருமகன்).
சூ.மரியநாயகம் (மகன்).

*கோவிந்தபுலம்,*
*இளவாலை.* (13196)

### பொன்னையா இராமநாதன்
*(முன்னாள் பகுதிநேர ஆசிரியர்)*

தொல்புரம், வடக்கம்பரையைச் சேர்ந்த பொன்னையா இராமநாதன் நேற்று (13.01.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா (பிரபல வர்த்தகர்) - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சித்தன்கேணி, பண்ணாலையைச் சேர்ந்த திருநாவுக்கரசு (அப்புத்துரை) இராசதுரை - காமாட்சிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் சுழிபுரம், விக்ரோறியாக் கல்லூரி மாணவன் கபிரதன், மாணவி பகிரதி ஆகியோரின் அருமைத் தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-01-2003) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுழிபுரம் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி.இராசதுரை (மாமனார்)

*தொல்புரம்,*
*வடக்கம்பரை.* (13201)

---


## உங்கள் வீட்டு ஜெனரேட்டர்கள்

## 2.4 Kva முதல் 7.0 Kva வரை

மின் உற்பத்தித் துறையில் முன்னோடிகளான
**ஸ்ரெஃபில் (STEPHILL)**
வர்த்தகச் சின்னம் தாங்கிய பரவலான தரமிக்க தயாரிப்புகள்

* எரிபொருள் விரயமற்றது. ஹொண்டா GX பெற்றோல் இயந்திரம் ; சிக்கனமான பாவனைக்கு உகந்தது.
* மின் நிர்ணய பொத்தான் / சக்தி மீறலைத் தவிர்க்கும் MCB பாதுகாப்பு
* எண்ணெய் மட்ட அவதானிப்பு, மின்சுருள் இயக்கி. சட்டத்தைச் சுற்றிக் கவசம். கனரக உருக்கு கட்டுப்பாட்டு பெட்டகம்.
* குறைவான இரைச்சல் 7 மீட்டர்களில் 73 dBA வீட்டின் உட்புறச் சூழல் தேவையற்ற சத்தத்தினால் மாசுபடாது
* பாதுகாப்பானது, நம்பிக்கையானது - பிரிட்டிஷ், ஐரோப்பிய தராதரங்களுக்கு அமைவாக இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டது.

12 மாத உத்தரவாதம்

CSSC

**The Ceylon Service & Supplies Co. Ltd.**
110, Dehiwela Road, Maharagama, SriLanka.
Tel: 94-1-746100, 94-(0)-75-554672/73 Fax: 941.851.915
e-mail: sersupce@mega.lk

# மூத்த எழுத்தாளர் கசின் காலமானார்

மூத்த எழுத்தாளர் க.சிவகுருநாதன் (கசின்) நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 82.

நாற்பதுகளின் பிற்பகுதியிலிருந்து மூன்று தசாப்த காலம் ஈழத்தின் அனைத்துப் பத்திரிகைகளிலும் சிறுகதை, நாவல், கட்டுரை என்று முத்துறைகளிலும் நிறைய எழுதியவர் அவர்.

தூய தமிழில் எளிமை நடையில் எழுதிவந்த கசின்,பண்டிதமணி கலாநிதி சி.கணபதிப்பிள்ளையைத் தமது குருவாகப் போற்றியவர். சுமார் 35 ஆண்டுகள் ஆசிரியப்பணி புரிந்த அவர், 1978 இல் இளைப்பாறும்வரை ஏழு ஆண்டுகள் உடுத்துறை மகாவித்தியாலய அதிபராகச் சேவையாற்றினார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினால் 'இயற்றமிழ் வித்தகர்' என்று பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்ட பண்டிதர் சிவகுருநாதனுக்கு கலாசார அமைச்சும் 'கலாபூஷணம்' விருது வழங்கிக் கௌரவித்தது.

கலை இலக்கியப் பேரவையின் தலைவராக விளங்கிய அவரை 1994 இல் இலங்கை இலக்கியப் பேரவை கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

(ம)

# ஜயசூரிய மீண்டும் சதம் குவித்தார்! இலங்கைக்கு மற்றொரு வெற்றி!!



சதம் குவித்த மகிழ்ச்சியில் இலங்கை அணித்தலைவர் சனத் ஜயசூரிய. மற்றும் இங்கிலாந்து வீரரின் விக்கெட்டை வீழ்த்திய மகிழ்ச்சியில் அரவிந்த டி சில்வாவுடன் (வலது) குமார் சங்ககார.

வி.பி.கிண்ணத்திற்கான முக்கோணக் கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அணியை, இலங்கை அணி 31 ஓட்டங்களால் வென்றது. இத்தொடரில் இலங்கை அணி பெற்ற இரண்டாவது வெற்றி இதுவாகும்.

இலங்கை அணித் தலைவர் சனத் ஜெயசூரிய தனது இரண்டாவது சதத்தைப் பெற்றார்.

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டி நேற்று சிட்னி நகரில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மாவன் அத்தபத்து முதலாவது ஓவரிலேயே ஓட்டம் எதுவுமின்றி ஆட்டமிழந்தார்.

எனினும் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய சனத் ஜெயசூரியவும் ஹசான் திலகரத்னவும் இரண்டாவது விக்கெட்டுக்காக 144 ஓட்டங்களைக் குவித்தனர்.

இங்கிலாந்து அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் இரண்டாவது விக்கெட்டுக்காக இலங்கை பெற்ற ஆகக்கூடுதலான ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

1998இல் லோட்ஸில் நடைபெற்ற போட்டியில் அத்தபத்துவும் ரொமேஷ் களுவிதாரணவும் 138 ஓட்டங்களைக் குவித்தமையே இதுவரை சாதனையாக இருந்தது.

ஜயசூரிய 110 பந்துவீச்சுக்களில் 106 ஓட்டங்களைப் பெற்றார். இவற்றுள் ஒரு சிக்ஸர், 15 பவுண்டரிகளும் அடங்குகின்றன.

திலகரத்ன 44 ஓட்டங்களையும் அரவிந்த டி சில்வா 51 ஓட்டங்களையும் பெற்றனர். மஹேல 30 பந்து வீச்சுக்களில் 33 ஓட்டங்களைப் பெற்றார். 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 284 ஓட்டங்களைக் குவித்தது இலங்கை அணி.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, 49.1 ஓவர்களில் 253 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இலங்கை அணி சார்பாக அரவிந்த டி சில்வா 30 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சனத் ஜயசூரிய தெரிவானார். (ம-5)

# நாவாந்துறை மோதல்; ஐவர் நேற்றுக் கைது!

நாவாந்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவும் நேற்றுக்காலையும் இடம்பெற்ற மோதல்கள் தொடர்பாக ஐந்து பேர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐவரையும் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் ஆர்ரி.விக்ராஜா உத்தரவிட்டுள்ளார்.

கைதானவர்களில் நாவாந்துறை கடற்கரை வீதியைச் சேர்ந்தவர்களான செ.மரியதாஸன் (வயது 61), வி.கில்டர் (வயது 18), வி.தர்சன் (வயது 16) மற்றும் பூநகரியைச் சேர்ந்த பி.யேசுராஜன் (வயது 22) ஆகிய நால்வரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நாவாந்துறையைச் சேர்ந்த ராஜா கமலதாஸ் என்பவர் காயமடைந்திருந்தமையால் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிறைக்காவலர்களின் பாதுகாப்புடன் சிகிச்சை பெற்றுவருகிறார்.

கைதுசெய்யப்பட்ட ஐவர் மீதும் கடைஉடைப்பு மற்றும் மோட்டார் சைக்கிளைத் தீ மூட்டியமை போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக பொலீஸ்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை துரையப்பா விளையாட்டரங்கில் சென்.அன்ரனஸ் மற்றும் சென்.நீக்கலஸ் அணிகளுக்கிடையே இடம்பெற்ற ஆட்டத்தை தொடர்ந்தே இந்த கோஷ்டி மோதல் ஆரம்பித்தது.

அதனைத் தொடர்ந்து நாவாந்துறை பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நேற்று அதிகாலை அது நீக்கப்பட்டதும் நாவாந்துறையின் வடக்குப் பகுதியில் இருந்து பொல்லுகள், தடிகள், அலவாங்குகள் சகிதம் பலர் தெற்குப்பகுதி நோக்கி வந்ததாகவும் -

அவர்கள் வருவதைக்கண்ட தென பகுதியைச் சேர்ந்தவர்கள், அவர்களை எதிர்த்து அணி திரண்டதாகவும் -

இதனால், காலையில் மீண்டும் மோதல் வெடித்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது. இந்த மோதலில் கடற்கரை வீதியில் அமைந்திருந்த குளிர்பான நிலையம் ஒன்று தாக்கப்பட்டது.

நாவாந்துறை சென்.நீக்கலஸ் மகளிர் மன்றத்துக்கு அருகில் அமைந்துள்ள வீட்டினுள்ளும் தாக்குதல் நடத்தப்பட்டது. அங்கிருந்த மோட்டார் சைக்கிள், தொலைக்காட்சிப் பெட்டி என்பன அடித்து நொறுக்கப்பட்டன.

உடனடியாக அப்பகுதிக்கு விரைந்த பொலீஸார் மோதலைக்கட்டுப்படுத்த வான் நோக்கித் துப்பாக்கி பிரயோகம் செய்தனர் என்றும் கூறப்பட்டது.

இந்த மோதல் சம்பவத்தால் நேற்று முழுவதும் நாவாந்துறைப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

(ம-9-30-139-51-15)

## புலிகள் விரும்பினால் ஐ.நா.செயலரை சந்திக்கலாம

அடுத்தமாதம் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ள ஐ.நா.சபையின் பொதுச்செயலாளர் கோபி அனானைச சந்திப்பதற்கு புலிகள் விரும்பினால் அதற்குரிய ஏற்பாடுகள் செய்து கொடுககப்படும் என்று வெளிவிவகார அமைசசர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இது குறித்து விடுதலைப் புலி பிரமுகர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் -அவர்கள் விரும்பினால் கொழும்பில் வைத்து அவரைச் சந்திப்பதற்குரிய ஏற்பாடுகளை செய்யத்தாம் தயாராக இருப்பதாகவும்- அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

# ஐ.தே. முன்னணி அரசு இன்னும் 6 மாதத்தில் கலைக்கப்படும்

ஐ.தே.முன்னணி அரசு அடுத்த 6 மாதத்துக்குள் கலைக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

பொ.ஐ.முன்னணியின் கூட்டம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச் செல்வதால் ஜே.வி.பி.யின் உதவியுடன் அடுத்த ஆறுமாத காலத்துக்குள் அதனைக் கவிழ்ப்பதற்கு பொ.ஐ. முன்னணி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

## சிறுவர் திறன்விருத்தி போட்டி

தென்மராட்சிப் பிரதேச சிறுவர்களுக்கான திறன்விருத்திப் போட்டிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

மேற்படி போட்டிகளுக்கான விண்ணப்பபடிவங்களைப் பெற்றவர்கள் நாளை புதன்கிழமை தத்தமது பிரிவு சமுர்த்தி அலுவலரிடம் ஒப்படைக்குமாறு அறிவித்துள்ளனர்.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினர் யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து மாவட்ட ரீதியில் சிறுவர்களுக்கிடையில் கட்டுரை, கவியரங்கு, பேச்சு, பாட்டு ஆகிய போட்டிகளை நடத்துவது குறிப்பிடத்தக்கது.

(ம-117)

# மரண அறிவித்தல்கள்

## கோபாலபிள்ளை புவனேஸ்வரி

வேலணை கிழக்கு, வங்களாவடியைப் பிறப்பிடமாகவும் இல.7/2, தாளையடி லேன், திருநெல்வேலியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோபாலபிள்ளை புவனேஸ்வரி அவர்கள் நேற்று முன்தினம் (12-01-2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் செல்லையா கோபாலபிள்ளையின் அன்பு மனைவியும் சுமதி, இளங்கோ (செல்வா - சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஏகேந்திரன் (இந்திரன்), ஜெயந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்சிகா, தர்சன், தர்சிந்தா, தர்மிளா, தர்னிகா, நிரோசனன் (சுவிஸ்), தேனுகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பாக்கியலெட்சுமி, காலஞ்சென்ற புனிதவதி மற்றும் திருநாவுக்கரசு, குணபூசணம்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2003) செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானதிற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*7/2, தாளையடிலேன், திருநெல்வேலி.* (c/26058)

தகவல்: செ.கோபாலபிள்ளை (கணவர்), ச.இந்திரன் (மருமகன்).

## சுந்தரலிங்கம் பத்மாவதி (பத்மா)

யாழ்ப்பாணம், அரியாலை, சந்தன மாதா கோயில் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும் வவுனியா இல. 16, குட்செட் வீதியை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி சுந்தரலிங்கம் பத்மாவதி (பத்மா) 13.01.2003 அன்று காலமானார்.

அன்னார் S.சுந்தரலிங்கம் (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர், நீர்ப்பாசனத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரமநாதர் - பொன்னம்மா தம்பதிகளின் மகளும் சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதிகளின் மருமகளும் ஸ்ரீதேவி (கிளிநொச்சி), திலிப்குமார் (பிரான்ஸ்), சசிதா (லண்டன்), இதயகுமாரி (பிரான்ஸ்), சுதர்சினி (வவுனியா வளாகம்), காலஞ்சென்ற பிருந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும், S.ஸ்ரீரங்கநாதன் (L.O, கிளிநொச்சி), கோமளா (பிரான்ஸ்), S.குணேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் யோகராசா, காலஞ்சென்ற திருமதி குலசேகரம் காலஞ்சென்ற நவரெட்ணம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 18.01.2003 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு தோணிக்கல் இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.16, குட் செட் வீதி, வவுனியா.* (c/26057)

தகவல்: கணவர் - S.சுந்தரலிங்கம்

## கனகசபை சிவகுருநாதன் (கசின்)

*(முன்னாள் அதிபர், உடுத்துறை மகாவித்தியாலயம், மூத்தஎழுத்தாளர் - கலாபூசணம்)*

புலோப்பளையைப் பிறப்பிடமாகவும் சரசாலை மத்தியை புகலிடமாகவும் தற்போது கொழும்பு பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட மூத்த எழுத்தாளரும், உடுத்துறை மகாவித்தியாலய முன்னாள் அதிபருமான கனகசபை சிவகுருநாதன் (கசின்) காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக்கணவரும் புஷ்பராணி, புஷ்பநாதன் (கட்டடக்கலைஞர்), செல்வராணி, சபாநாதன் (உதவி சுங்கப்பணிப்பாளர்) கேதீஸ்வரநாதன் (கணனிப்பகுப்பாய்வாளர்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் பொ.ஆனந்தலிங்கம் (இலங்கை மத்திய போக்குவரத்துச்சபை), புகலைராசி, கு.சண்முகம் (தொழில்நுட்பவியலாளர்), ச.ஸ்ரீநந்தினி, கே.ரஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அவரது இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*H.6, அரசினர் தொடர்மாடி, பம்பலப்பிட்டி, கொழும்பு - 4. தொலைபேசி இல.502224* (C/26056)

தகவல்: சி.சபாநாதன் (உதவிசுங்கப்பணிப்பாளர்)

## செல்லத்துரை தவச்செல்வன்

பொன்னையா வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலைச் சேர்ந்த செல்லத்துரை தவச்செல்வன் நேற்று (13.01.2003) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நடராசா செல்லத்துரை - அன்னலட்சுமி தம்பதிகளின் மூன்றாவது மகனும் அருட்செல்வன் (லண்டன்), சிவச்செல்வன் (C.T.B. - கோண்டாவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாமினியின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2003) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொன்னையா வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (13219)

தகவல்: நடராசா செல்லத்துரை (தந்தை) (முன்னாள் சாரதி, C.T.B, கோண்டாவில்).

## யாழ்.கோண்டாவில் கிழக்கு சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்



### மகர ஜோதி பெருவிழா

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருகூஷம் மார்கழித் திங்கள் 30ஆம் நாள் 14.01.2003 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி முதல் 6 மணி வரை சுவாமிக்கு ஐயப்பன் அடியார்கள் எல்லோரும் நெய் அபிஷேகம் செய்விக்கலாம். மாலை 6 மணி முதல் கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில் இருந்து சுவாமி ஐயப்பனுடைய திருவாபரண பெட்டி ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு மங்கள தீபாராதனையும், விசேட மஹாஜோதி பதினெட்டாம் படி பூஜையும், ஸ்வாமி வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து, ஹரிவராசனம் பாடல்பாடி நடை சாத்தப்படும்; ஐயப்பன் மங்கள பிரசாதம் வழங்கப்படும்.

அனைவரும் வருகை தந்து சபரிமலை சென்று வந்த குரு ஸ்வாமிகள், சாம்பசிவ ஜெகதீஸ்வர குரு ஸ்வாமி, க.அரிகரசுத குருஸ்வாமி அவர்களின் கைகளால் ஐயப்பன் பிரசாதத்தை பெற்று, ஐயன் அருள் பெறுவீர்களாக.

அனைவரும் வருக திருவருள் பெறுக!

*சுவாமியே சரணம் ஐயப்பா!*

சபரீச ஐயப்பன் தேவஸ்தானம் கோண்டாவில்.

(13217)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் யாழ்.மாவட்டம்

சகல கல்விக் கோட்டங்களின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் 17.01.2003 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கன்னாதிட்டி புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் நடைபெறும்.

தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றிய பிரதான முடிவுகள் இக்கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளதால் அனைத்துக் கோட்ட உறுப்பினர்களும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

செயலாளர்,

(13218) தனியார் கல்வி நிறுவன ஒன்றியம், யாழ்.மாவட்டம்.


ராஜா யாழ்ப்பாணம்.

முரளி, ராதிகாசௌத்திரி, வடிவேல், மணிவண்ணன் நடித்த

சுந்தரா ட்ராவல்ஸ்

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30

நாளை முதல் விஜய், ஸ்நேகா வசீகரா

ரிக்கற்றுக்களை முற்பதிவு செய்து கொள்ளலாம்.

நிறஞ்சனாஸ் சங்கானை

இன்று மட்டும் சூர்யா நடித்த

உன்னை நினைத்து

நாளை முதல 'என்மன வானில்'

கா.நே. - 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்) (C/25777)

நாகம்ஸ் சுன்னாகம்

அஜித், கிரண், மீரா, நிழல்கள் ரவி நடித்த

வில்லன் (ரீஸ்ஸ்)

காட்சிகள்: 11.00, 3.00, 6.30 மணி

பொங்கல் வெளியீடாக நாளை (15.01.2003) முதல

பிரசாந், ஸ்னேகா நடித்த

விரும்புகிறேன் (13216)

# வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம்; வலியுறுத்தி 'பொங்குதமிழ்' பிரகடனம்

யாழ்ப்பாணம்,ஜன.14

வடக்கு - கிழக்கு தமிழ்மக்களின் தாயகம் என்பதை வலியுறுத்தி பொங்குதமிழ் பிரகடனம் ஒன்று எதிர்வரும் 17ஆம் திகதி வெளியிடப்படவிருக்கின்றது.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அன்று இடம்பெறும் பொங்குதமிழ் நிகழ்வின்போது இப்பிரகடனம் வெளியிடப்படும்.

பொங்குதமிழ் செயற்பாட்டுப் பிரதிநிதிகள் அன்று ஒன்றுகூடி தமிழ்மக்களின் தாயகம் தொடர்பாக பல்வேறு நிகழ்வுகளையும் நடத்தவிருக்கின்றனர்.

பொங்குதமிழ் நிகழ்வின் யதார்த்ததை மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய பல்வேறு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ம-3)

## இந்தியாவிலுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவிலுள்ள 111 அகதி முகாம்களில் சுமார் 64,000 இலங்கையரும், அகதிமுகாம்களுக்கு வெளியே சுமார் 24,000 இலங்கையரும் உள்ளனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களை இலங்கையில் எவ்வாறு மீள்குடியமர்த்துவது என்பது தொடர்பான சகல விடயங்களும் இக்கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளன.

அமைச்சர்களான ஜயலத் ஜயவர்த்தன, நூர்தீன் மசூர், மற்றும் சுங்கத் திணைக்களம், பிரதமர் அலுவலகம், வெளிவிவகார அமைச்சு, உள்துறை அமைச்சு, நீதி அமைச்சு மற்றும் கிழக்கு அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகளும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்கின்றனர்.

இந்தக் கலந்துரையாடலில் புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் குழு புலிகளின் அரசியல்துறை நிர்வாகச் செயலாளர் தங்கன் (சுதா). தலைமையில் கலந்துகொள்ளும். நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த பூவண்ணன், புலிகளின் சமாதானச் செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் இக்கூட்டத்தில் பங்குபற்றுவர்.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இக்கூட்டத்தில் பங்குபற்றமாட்டார் எனத் தெரிகிறது.

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வுக்கான உபகுழுவின் பணிப்பாளரான இரனியஸ் செல்வின், ஐக்கிய நாடுகளின் திட்ட அமைப்புப் பிரதிநிதி மிக் கையில் புருணோ, யூ.என்.எச்.சி.ஆர்.பிரதிநிதி செல்வி கற்பிறிச் உட்படப் பலர் கலந்துகொள்கின்றனர்.

தாயகம் திரும்பும் அகதிகளுக்கு வழங்கப்படவேண்டிய சமூகநலத் திட்டங்கள், அவர்களுக்கான கடவுச்சீட்டு, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளன. முக்கியமாக பிள்ளைகளுக்கு கல்வி வசதிகளை எவ்வாறு ஏற்படுத்திக்கொடுப்பது என்பது பற்றியும் ஆராயப்படவுள்ளது.

(ம)

## தற்போதைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை லக்ஷ்மன் கதிர்காமர் சந்தித்துப் பேசுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

'த இந்து' நாளிதழுக்கு வழங்கிய பேட்டியில் கதிர்காமர் மேலும் தெரிவித்ததாவது:-

வலு சிம்பிளாக புலிகள் அரசுக்கு வழிநடத்தல் கட்டளைகளை போடுகின்றனர். எந்தவிலை கொடுத்தாவது சமாதானத்தை வாங்கவேண்டுமென்று எண்ணி அரசு செயற்படுகின்றது.

சமாதானத்துக்கான விலை தாங்கமுடியாத பாரமானதாக இருக்கும்.

இந்தப் போக்கில் சமாதான முயற்சிகள் தொடர்ந்தால் நிச்சயமாக நாடு துண்டாடுவதில் தான் அது போய்முடியும்.

இராணுவ நிலை மாற்றம் தொடர்பாக தாய்லாந்தில் அண்மையில் இடம்பெற்ற பேச்சுக்களில் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில் எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை.

ரணில் விக்கிரமசிங்க அரசு வேறு இதமாகக் கூறினாலும் அண்மையில் புலிகளின் கப்பல் கரையை வந்து அடைந்துவிட்டது.

இது சமாதான பேச்சுக்களின் போது புலிகளின் தலைமைத்துவம் கூறுவதற்கு மாறாக அந்த இயக்கம் களத்தில் எப்படி நாடகம் ஆடுகின்றது என்பதை உறுதிப்படுத்தும் ஒரு சான்றாகும்.

பலாலி விமானத்தளம் மற்றும் காங்கேசந்துறைத் துறைமுகம் ஆகியவற்றைச் சூழவுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து அரசபடைகளை வாபஸ் பெறுமாறு புலிகள் வற்புறுத்துவது கவலைக்குரிய மற்றைய விடயமாகும்.

புலிகள் அப்பிரதேசத்துக்குள் தமது யுத்தக்குடும்பங்கள் சிலவற்றைக் குடியமர்த்துவதற்கு விரும்புகின்றனர்.

அதன் மூலம் மோட்டார்கள் மற்றும் ஹொவிட்ஸ் பீரங்கிகளின் தாக்குதல்களை எதிர்கொள்ளும் இசைவாக்கத்தை அவர்களுக்கு பெற்றுக்கொடுக்க புலிகள் திட்டமிடுகின்றனர்.

அந்தப் பிரதேசத்தைப் பாதுகாப்பதற்கு வசதியாக மனிதக்கேடய அணி ஒன்றை உருவாக்குவது அவர்களின் திட்டம்.

இத்தகைய படை வாபஸ்"க்கு எதிராக இலங்கை இராணுவம் கடும் நிலைப்பாடு எடுத்துள்ளது. நோர்வே அரசும் இந்த நிலைப்பாட்டை ஆதரித்துள்ளது. புலிகளிடம் இருக்கும் ஆயுதங்களைக் களைய வேண்டுமெனு இராணுவம் வலியுறுத்துகின்றது. சமாதான முயற்சிகள்ஆரம்பமாகி ஒரு வருடம் ஆகின்றது. எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய நிலைமை வந்துள்ளது. அதிகாரப் பகிர்வுக்கான ஓர் ஏற்பாடு அவசியம்தான் ஆனால், அதில் வடக்கு - கிழக்கில் வாழும்முஸ்லிம்களின் உரிமையும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

புலிகளின் தயவில் இருக்க வேண்டிய நிலையில் தங்களைக் கைவிட்டு விடுவார்கள் என்ற அச்சம் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபடும் அளவுக்கு இந்த அச்சம் காணப்படுகின்றது.

- இவ்வாறு கதிர்காமர் மேலும் தெரிவித்தார்.

(ம)


பரீட்சை - 2003
2003ஆம் ஆண்டின்
முதலாவது பரீட்சை
17.01.2003 ஆரம்பம்
தரம்: 4 முதல் O/L வரை
★ பரீட்சை எழுதலாம்.
★ வினாப்பத்திரம் பெறலாம்.
விவரங்களுக்கு வருக
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
(நல்லூர் கோயில் முன்பாக)
(13209)


## தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணிக்கு இச்சந்திப்பு இடம்பெறும் என்று கூட்டமைப்பின் எம்.பியான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அரசு - புலிகள் தாய்லாந்தில் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட - பாதுகாப்பு விடயங்கள் குறித்த - நடைமுறைகளை விரைவில் அமுல்படுத்துமாறும் இந்தச் சந்திப்பில் பிரதமரை வலியுறுத்தவுள்ளதாகக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.(ம)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆண்டு பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். இதற்கு வெளிநாட்டு உதவிகளும் பெற்றுக்கொடுக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் 50 ஆயிரம் வீடுகளுக்கு தற்போது மின் விநியோகம் வழங்கப்படுகிறது. அவை மேலும் விஸ்தரிக்கப்படும்.

- இவ்வாறு அமைச்சர் ஜயசூரிய குறிப்பிட்டார். (ம)

## நான்காம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தையும், பிரேரணைகளையும் முன்வைக்க வேண்டும் என்ற கருத்தை ஆதரித்துப் பேசினார் அவர்.

அங்கு பேசிய எம்.பி.ஏ.அஸீஸ் எம.பி. தமக்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் அணியினரின் ஆதரவு கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

அடுத்த கட்டப் பேச்சுக்களின் போது முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தனியான முஸ்லிம் குழு கலந்துகொள்ளவேண்டும் என்று ஒருங்கிணைப்புக்குழு கருத்தொருமை கண்டதாகக் குழுவின் தலைவர் அமைச்சர் நூர்தீன் மசூர் தெரிவித்தார்.

முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் குழு ஒரு பொதுப் பிரேரணையை முன்வைக்கும். இக்குழுவில் வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும் என்றார் குழுவின் செயலாளர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா எம்.பி.

குறிப்பிட்ட சில விடயம் தொடர்பாக நிபுணர்களையும், அரசியல் ஆலோசகர்களையும் அழைத்துக் கலந்துரையாடும் குழுவின் அடுத்த கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (ம)

## பாயிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸ் பேராளர் மாநாடு முடிவுற்று பாயிஸ் புத்தளம் திரும்பும்பொழுது அவரைத் தீர்த்துக்கட்டத் திட்டம் தீட்டப்பட்டிருந்ததாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்திருக்கிறது. கைது செய்யப்பட்டவர்களில் எட்டுப் பேர் முஸ்லிம்கள்.

கொலை முயற்சி பற்றி பாயிஸிடம் கேட்டபோது, தம்மை கொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட 10 ஆவது முயற்சி இது என்றார். அரசியலில் தம்மோடு மாறுபட்டவர்களே தம்மைக் கொலைசெய்வதற்கு பாதாள உலகக் குண்டர் கோஷ்டிகளை ஏவி விட்டு வருகிறார்கள் என்று தாம் பொலீஸாரிடம் தெரிவித்த போதெல்லாம் புத்தளத்தில் பாதாள உலகக் கோஷ்டி எதுவும் இல்லை என்று பொலீஸார் அடித்துக் கூறிவிட்டனர்.

இப்போது அவர்களே பாதாள உலகக் குண்டர் கோஷ்டிகளை கைது செய்யும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

இதற்கிடையே பாயிஸ் கொலை முயற்சி குறித்து உரிய விசாரணை நடத்தி அதன் அரசியல் பின்னணியை அம்பலப்படுத்துமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பொலீஸாரை கேட்டிருக்கிறார். (ம)

# லொறி உரிமையாளர்கள் நேற்றுமுதல் வேலைநிறுத்தம்

வடமராட்சி,ஜன.14

யாழ்.மாவட்ட தனியார் லொறி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த லொறி உரிமையாளர்கள் மீண்டும் நேற்று முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி இந்தப் போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

பருத்தித்துறை பஸ்நிலைய சதுக்கத்தில் முதலாம் குறிக்குத் தெரு நுழைவாயிலுக்கு சமீபமாக விசேட பந்தல் ஒன்றை அமைத்து லொறி உரிமையாளர்கள் சுலோக அட்டைகளுடன் அமர்ந்திருந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கமும், யாழ்.செயலக புனர்வாழ்வுப் பணிப்பாளரும் அங்கு வந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டோருடன் கலந்துரையாடினர்.

ஒரு பைக்கற் சிமெந்தை ஏற்றிவர 15 ரூபாவீதம் வழங்கலாம் என யாழ். மேலதிக அரச அதிபர், லொறி உரிமையாளர்களிடம் கூறினார். இந்தக் கட்டணம் சாதகமானதல்ல. ஒரு பைக்கற்றுக்கு 18 ரூபா வீதம் தருமாறு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த லொறி உரிமையாளர்கள் மேலதிக அரசாங்க அதிபரிடம் கேட்டுக்கொண்டனர்.

இதுதொடர்பான முடிவை யாழ். செயலகத்துக்கு சென்று கலந்தாலோசனை நடத்திய பின்னர் அறிவிப்பதாக மேலதிக அரச அதிபர் கூறினார். சரியான முடிவை யாழ்.மேலதிக அரச அதிபர் அறிவிக்காவிடில் இன்றும் போராட்டம் தொடருமென லொறி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் அறிவித்துள்ளது.

(ம-173)

# குடாநாட்டிலிருந்து வெளி இடங்களுக்கு கைதிகளைக் கொண்டு செல்ல புலிகளின் வழித்துணை தேவை

## சிறைச்சாலை ஆணையாளரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதிக்கு ஏ-9 பாதையூடாக கைதிகளைக் கொண்டுசெல்வதற்கு முகமாலை முதல் புளியங்குளம் வரையான பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் வழித்துணையைப் பெற்றுத்தரவேண்டும் என யாழ்.சிறைச்சாலை நிர்வாகம், சிறைச்சாலை ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது விடயத்தில் உதவுவதற்குப் புலிகள் முன்வரவேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி யாழ். சிறைச்சாலையிலிருந்து அநுராதபுரம் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட கைதி ஒருவர் மன்னகுளம் பகுதியில் வைத்து இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவத்தை அடுத்தே இந்த வழித்துணையைப் பெற்றுக்கொள்ள சிறைச்சாலை நிர்வாகம் முடிவுசெய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

புலிகள் வழித்துணை வழங்குவது அசாத்தியமாகுமிடத்து கைதிகள் ஏ-9 பாதையூடாக இடம்மாற்றப்படுவது இயலாமற்போய்விடும். என யாழ்.சிறைச்சாலை ஆணையாளர் சிவசுந்தரம் தெரிவித்ததார்.

(ம-9)

## பொங்கல் விழா

அராலி,ஜன.14

அராலி ஊரத்தி செந்தமிழ் சன சமூக நிலையம் தைப் பொங்கலை முதற்றடவையாக விழாவாகக் கொண்டாடத் தீர்மானித்துள்ளது.

வெகுவிமரிசையாக நடைபெறும் இவ்விழாவில் கிராமப் பெரியார்களின் பேச்சுக்களும், பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(ம-14)

★ ★ ★

குருநகர்,ஜன.14

குருநகர் சென்.றோக்ஸ் சன சமூக நிலையத்தில் வழமைபோல் இம்முறையும் நாளை புதன்கிழமை பொங்கல் நிகழ்வு நடைபெறும் என நிலையத் தலைவர் அ.பீற்றர் போல் தெரிவித்தார். (ம-51)

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிக்கள் எதிர்க்கட்சி வரிசையில் 4 தமிழ் எம்.பிக்கள் எல்லாமாக ஏழு பேர் மட்டுமே சபையில் இருந்ததாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இதனை விநாயகமூர்த்தி எம்.பியும் என்னிடம் உறுதிப்படுத்தினார். நண்பகல் 12 மணிக்கு முறையாக முடிவடையவிருந்த விவாதம் தினேஸ் குணவர்த்தன எம்.பியால் குழப்பப்பட்டது. இவரது முயற்சிக்கு ஜே.வி.பி., ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம்.பிக்கள் சிலரும் ஒத்து ஊதியிருக்கிறார்கள்.

கூட்டமைப்பு எம்.பிக்கள் தமது முழு பலத்துடன் சபைக்கு வந்திருந்தால் இந்த விவாதத்தில் குழப்புவதற்கு தினேஸ் குணவர்த்தனவும் அவரது சகாக்களும் மேற்கொண்ட முயற்சிகளை முறியடித்திருக்க முடியும்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோவைப் பொறுத்தவரையில் நாட்டுக்கு வெளியே சென்றிருந்த அடைக்கலநாதன் எம்.பியைத் தவிர மற்றைய 9 எம்பிக்களும் அன்றைய தினம் நாடாளுமன்றம் வராமைக்கான விளக்கம் எமது தலைமைப் பீடத்தினால் விரைவில் கோரப்படும்.

நாடாளுமன்றம் என்பது வயோதிபர் மடமோ அல்து வசந்த மண்டபமோ அல்ல. வாக்களித்த பொது மக்களின் உணர்வலைகளை உரிய நேரத்தில் உரிய முறையில் எதிரொலிக்கச் செய்யவேண்டிய அரங்கம் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சகல எம்.பிகளும் உணர வேண்டும்.

ஸ்ரீகாந்தா தனது அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார். (ம)

## மரண அறிவித்தல்

### சிவானந்தன் அனுஜா

(யா/வேம்படி மகளிர் கல்லூரி)

வேளாதோப்பு, கட்டப்பிராயைச் சேர்ந்த சிவானந்தன் அனுஜா நேற்று (13.01.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பொ.சிவானந்தன் (முகாமையாளர், கூட்டுறவுப் பதிப்பகம்) - றஞ்சனாதேவி (தூரிகை நுண்கலை வளாகம் - கல்வியங்காடு) ஆகியோரின் அன்பு மகளும் சுஜானி (யா/ஸ்ரான்லி கல்லூரி), நிருஜானி (யா/வேம்படி மகளிர் கல்லூரி), சிந்துஜா (யா/வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வேளாதோப்பிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (14.01.2003) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*வேளாதோப்பு,*
*கட்டப்பிராய்.*

(13220)

தகவல்:
பொ.சிவானந்தன்
(தந்தை)


NEW SCIENCE COLLEGE
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
இணைந்த கணிதம்
A/L 2005
திரிகோண கணிதம்
Wed. (4.00 - 6.00)
ஆரம்பம் : 15.01.03
A/L 2004
ஒரு தள விசைகள்
Sat. Sun. (4.30 - 6.00)
ஆரம்பம் : 18.01.03
ஆசிரியர் : செந்தில்நாதன் (B.Sc.)
(13206)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.01.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.